யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
சேவைக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவும்
7ஆவது

# மனிதம்

## இதழும்




JAFFNA HINDU COLLEGE
SERVICE CLUB

2011,2012

# மனிதம்

## இதழ் - 7

## 20ஆவது ஆண்டு நிறைவு மலர்

**இதழாசிரியர்**

ப.லக்ஸ்மன்

**அட்டைப்பட வடிவமைப்பு**

உ.மிரோஜன்

**ஆசிரிய ஆலோசகர்**

திரு.வ.தவகுலசிங்கம்

**2011 / 2012**

**சேவைக்கழகம்**

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**யாழ்ப்பாணம்.**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| கல்லூரிக் கீதம் | 1 |
| நிர்வாகக் குழு 2011 / 2012 | 2 |
| அதிபரின் ஆசிச்செய்தி | 3 |
| பிரதி அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி | 4 |
| பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி | 5 |
| உப அதிபரின் வாழ்த்துச் செய்தி | 6 |
| பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி | 7 |
| தலைவரின் உள்ளத்திலிருந்து...... | 8 |
| செயலாளரின் உள்ளத்திலிருந்து | 9 |
| இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...... | 10 |
| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | 11 |
| சேவைக்கழகம் | 12 |
| தாய்மையாகும் சேவை | 13 |
| ஜப்பான் அனு உலை வெடிப்பு | 14 |
| இன்றைய உலகில் நனோ தொழில்நுட்பம் | 16 |
| நான்காம் உலகப்போர் | 17 |
| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | 18 |
| சேவையின் தேவை | 20 |
| Importance of Service Club | 21 |
| வெடிகள் | 22 |
| கறுப்பு வெள்ளை உலகு | 23 |
| கல்லூரி நட்பு | 24 |
| விஞ்ஞானமே ஒரு நொடி நில் | 25 |
| என் இனிய தமிழுக்கு | 26 |
| நித்திரை | 28 |
| ஒரு மனிதனது ஆளுமை குடும்பம், பாடசாலை, சமூக நிறுவனங்கள் என்பவற்றினால் வளர்த்தெடுக்கப்படுகின்றன | 30 |
| மனிதா விழித்திடு | 31 |
| தாய் மொழியின் தனிச் சிறப்பு | 32 |
| Some Physics Vocabulary | 33 |

| | |
|---|---|
| ஒலிம்பிக் விளையாட்டின் வரலாறு | 37 |
| முடியும் முரண்பது | 39 |
| பூனூலும் மீன் பிடிக்கும் | 40 |
| சமூக நிலை | 41 |
| உடற்பயிற்சிக்கு ஓய்வளிக்கலாமா? | 42 |
| இரு முத்துகள் | 44 |
| மனிதாபிமானம் | 46 |
| கண்நோய் | 47 |
| Mahathma Ghanthi | 48 |
| தாஜ்மகால் ஏன் கட்டப்பட்டது? | 49 |
| அன்னை | 51 |
| உயிரில் பூத்த தோழமை | 53 |
| கல்வி | 54 |
| விஞ்ஞான மருத்துவ கண்டுபிடிப்புகள் | 55 |
| சமாதானம் | 56 |
| டைனோசர் | 57 |
| உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம் | 58 |
| அன்பை வளர்த்திடுவோம் | 59 |
| மாலைப்பொழுது | 60 |
| நவீன உலகின் கண்டுபிடிப்புகள் | 61 |
| மனித விழுமியங்களில் பொதுச் சொத்துக்களைப் பேணுதல் | 62 |
| நாணயம் வந்தது எப்படி? | 63 |
| விளம்பரங்கள் | 64-71 |
| படங்கள் | 72-73 |
| போட்டி முடிவுகள் | 74 |
| கழக அங்கத்தவர்கள் | 75 |
| 2012 இல் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் | 75 |
| நன்றிகள் ஆயிரம் உங்களுக்கு... | 76 |

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒரு பெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உள மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே - பல
கலைமலிகழகமும் இதுவே - தமிழர்
தலை நிமிர் கழகமும் இதுவே!

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மண்ணை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே - என்றும்
இன்புற வாழியே நன்றே!
இறைவன தருள்கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவை பயில் கழகமும் இதுவே!
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரென கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெரும் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு!

# நிர்வாகக் குழு 2011 / 2012

| | | |
|---|---|---|
| Patron | : | Mr.V.Ganesarajah (The Principal) |
| Staff Advicer | : | Mr.V. Thavakulasingam |
| President | : | Mas.U.Mirojan |
| Secretary | : | Mas. R. Birunthan |
| Treasurer | : | Mas.M. Nanthanan |
| Administrative Officer | : | Mas. S.Tharsan |
| Auditor | : | Mas. G.Kayanan |
| Vice President | : | Mas. S. Thiriyambaga sarma |
| Vice Secretary | : | Mas. S. Thuvarahan |
| Editor | : | Mas. P. Luxman |
| Duty Incharge | : | Mas. P. Hariraj |
| Store keeper | : | Mas. T.Sivajeevan |



# அதிபரின் ஆசிச்செய்தி

கல்லூரியின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கும் சேவைகழகமானது இன்று தனது 7ஆவது "மனிதம்" சஞ்சிகையை வெளியிடுவதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். சேவைக்கழகமானது அங்கத்தவரிடையே தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதுடன் ஆளுமை மிக்க மனிதராக மாணவர்களை உருவாக்கவும் துணைபுரிகின்றது.

அங்கத்தவர்களின் அயராத முயற்சியினால் இன்று தனது 7ஆவது "மனிதம்" சஞ்சிகையை மலரவைத்துள்ளது. இம் மனிதம் மாணவர்களின் தேடும் ஆற்றலையும் ஆக்கத்திறனையும் வளர்க்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும். இதுபோலவே இனிவரும் காலங்களிலும் தொடர்ந்தும் மனிதம் சஞ்சிகை வெளிவர வேண்டும் என சிவஞானவைரவப் பெருமானை வேண்டிக்கொள்வதோடு மாணவர்களுக்கும் இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வீ.கணேசராசா**
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி





# பிரதி அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

## "மனிதம் வாழ வாழ்த்துகிறேன்"

"மனிதம்" எனும் நாமம் பூ ண்டு சேவைக்கழகத்தினரால் வருடா வருடம் வெளியீடு செய்யும் சஞ்சிகையானது எமது கல்லூரி மாணவர்களை நன்னெறிப்படுத்தி, மானிடப் பிறவியின் மாண்புறு பயனைப் பெற வழி வகுக்கின்றது.

மனிதப் பண்புகள் வளர்க்கப்படுவதொரு புறமும், மழுங்கடிக்கப்படுவது மறுபுறமும் ஆக இருக்கின்ற சூழலில் வாழும் மாணவர்களை இப்படித்தான் வாழவேண்டுமென்று கொடி காட்டி நிற்பது "மனிதம்" சஞ்சிகையாகும்.

இச்சஞ்சிகையை வெளியீடு செய்யும் சேவைக்கழகம் அதில் அங்கத்துவம் பெற்றுப் பணியாற்றும் மாணவர்கள் தாம் கற்கின்ற காலத்திலேயே மனிதப் பண்புகளை நிலைநிறுத்தி செயலாற்றி வருகின்றார்கள்.

"மானுடம் வென்றதம்மா" என்ற பாரதியாரின் பாடலடி மனிதம்" என்ற பெயராலே நினைவுக்கு வருகின்றது.

எனவே இத்கைய சிறப்புறு "மனிதம்" சஞ்சிகை, அதனை வெளியிடும் மாணவர்கள், அவர்களை நெறிப்படுத்தும் பொறுப்பாசிரியர் அனைவரையும் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன். "மனிதம்" வாழ வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்,

**பொ.ஞானதேசிகன்**

**(பிரதி அதிபர் – நிர்வாகம்)**





# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

21ஆம் நூற்றாண்டில் தனது 20ஆவது ஆண்டு நிறைவில் சேவைக் கழகத்தின் "மனிதம்" மலர் மலர்ந்து மணம் பரப்புவது கண்டு வாழ்த்துவதில் மனம் மகிழ்கின்றேன்.

சேவைக்கழகம் இந்துக் கல்லூரியின் பல்வேறு நிகழ்வுகளில் பெயருக்கேற்பவே அர்ப்பணிப் புடன் தன்னலமற்ற சேவையாற்றி வருவது வெளிப்படை. பல்வேறுபட்ட திறன்களை மாணவர்களிடையே வளர்த்தெடுப்பதிலும் கற்றலுக்கான சூழலை மேம்படுத்துவதிலும் பெரும் பங்காற்றுவதுடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடனான ஒழுக்கசீலர்களாக இந்துவின் மைந்தர்களை உருவாக்குவதிலும் சேவைக் கழகத்தின் பொறுப்பாசிரியர் திரு.வ.தவகுலசிங்கத்தின் பங்கு அளப்பரியது.

கட்டுக்கோப்பான இக்கழகத்தின் மற்றுமோர் செயற்பாடாக உறுப்பினர்களின் எழுத்தாற்றலை விருத்தி செய்யும் வகையில் செல்வன் ப.லக்ஸ்மனின் பங்களிப்புடன் வெளிவரும் "மனிதம்" 07ஆவது சஞ்சிகையூ டாக சேவைக் கழகத்தின் சேவை மேன்மேலும் ஓங்கிட எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**ச.நிமலன்**

**பிரதி அதிபர் – கல்வி அபிவிருத்தி**





# உப அதிபரின் வாழ்த்துச் செய்தி

மக்கள் சேவை மகேசன் சேவை என்பதற்கிணங்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சேவைக்கழகத்தினர் தமது ஏழாவது வெளியீடாக வெளியிடுகின்ற மனிதம் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இன்றைய காலவோட்டத்தில் சேவை கழகத்தினர் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றனர். இவர்களது சேவைகளை துலங்க வைக்கின்ற ஆற்றல் மிகு ஏடாக இந்நூல் விளங்குகின்றது. மாணவர்களின் தன்னம்பிக்கை முயற்சி என்பவற்றால் மனிதம் சஞ்சிகை மிளிர்கின்றது. மாணவர்கள் கல்வி கற்கின்ற காலங்களிலேயே இவ்வாறான சஞ்சிகைகளை வெளியிடுவது வரவேற்கதக்கது கல்லூரியின் பெருமையை மேலும் மெருகூட்ட செய்கிறது.

இவ்வாறான சஞ்கிகையினை தொடர்ந்து வெளியிடுவதற்கு கல்லூரியில் வீற்றிருக்கும் சிவஞானபெருமான் துணை நின்று ஆசி நல்க வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.ச.சுரேந்திரன்**
**உப அதிபர்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**





# பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி

சேவையாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வரும் மனிதம் இதழ் - 07 வெளிவருவதை யிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்லூரி வாழ்க்கையில் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளுக்கு மேலாக இணை பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவது அவசியமாகும். இதன் மூலமே மாணவன் முழுமையான ஆளுமை விருத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சேவையாளர்களின் ஒன்றிணைந்த முயற்சியால் வெளிவரும் மனிதம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டுமென வாழ்த்துவதுடன் சிவஞான வைரப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டுமெனவும் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

**திரு.வ.தவகுலசிங்கம்,**
**பொறுப்பாசிரியர்**





# தலைவரின் உள்ளத்திலிருந்து......

## 20வது அகவையில் சேவைக்கழகமும் 7வது அகவையில் மனிதமும்

"மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும் வாக்கிற்கமைய தன்னலங்கருதாத சேவையில் இருபது அகவையை பூர்த்தி செய்து சேவைக்கென தனியிடத்தைப் பெற்று மிளிரும் எமது சேவைக்கழகமானது தனது வெற்றிப்பாதையின் படிக்கல்லாக 7வது மனிதம் சஞ்சிகையை இன்று வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறது.

எமது கழகமானது ஆரம்பித்து குறுகிய காலத்தில் பல வளர்ச்சியினை கண்டு நிறைவான பணிகளினை ஆற்றியுள்ளது. ஆற்றி வருகின்றது. இனிவரும் காலங்களிலும் ஆற்றும் என்பதில் ஐயமில்லை. நூற்கல்வியுடன் நின்றுவிடாது எதிர்காலத்தில் தமக்குள் அடங்கியுள்ள திறமைகளை வெளிக்கொணரும் ஊடகமாக எம் கழகமும் சஞ்சிகையும் விளங்கும் என நம்புகிறேன்.

சேவைக்கழக அங்கத்தவர்களது ஆக்கங்களை தாங்கி தங்களது கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் 7ஆவது மனிதத்தினை வெளியிடுவதில் நானும் பங்காற்றியுள்ளேன். என்பதனை நினைத்து பெருமிதம் கொள்கிறேன். மேலும் ஆசியுரை வழங்கி எம்மை ஊக்குவித்த அதிபர், பிரதி அதிபர்கள், உபஅதிபர் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**உ.மிரோஜன்**
*தலைவர்*





# செயலாளரின் உள்ளத்திலிருந்து

"ஓங்கு நல்லறிஞர்கள் உவப்போடு காத்திடும் ஒரு பெரும் கலையகமான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின். சேவைக்கழகமானது தனது 20வது ஆண்டு நிறைவையொட்டி 7வது மனிதம் இதழை வெளியிடுகின்றமையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்கின்ற அப்பர் கூற்றில் அவரது சேவையுள்ளம் தெளிவாக விளங்குகின்றது. அதேபோல 21ஆம் நூற்றாண்டில் சேவை செய்யவென ஒரு கழகம். அது யாழ் இந்துக் கல்லூரியின் சேவைக்கழகம் ஆகும்.

மேலும் அங்கத்தவர்களின் திறனை வெளிக்கொணரும் பொருட்டு அவர்களது ஆக்கங்களை தாங்கிய நிலையில் 7வது "மனிதம்" எனும் குழந்தை ஏனைய மாணவர்களுக்கும் சிறந்ததொரு அறிவுத்தொகுப்பாக விளங்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

இந்நூலானது கழகப்பொறுப்பாசிரியரின் சிறப்பான வழிகாட்டலினாலும் கழக அங்கத்தவர்களின் விடா முயற்சியினாலும் பல சவால்களை வெற்றி கண்டு வெளிவந்துள்ளது. இச்சஞ்சிகையை வெளியிடுவதற்கு பக்க பலமாகவும் உறுதுணையாகவும் விளங்கிய கல்லூரி அதிபர். பிரதி அதிபர்கள். உபஅதிபர். ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**ர.பிருந்தன்**
**செயலாளர்.**





# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து......

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சேவைக்கழகமானது தனது தன்னலங்கருதாத சேவையில் இன்று 20 அகவையைப் பூ ர்த்தி செய்து இருப்பதோடு 7ஆவது மனிதம் இதழினையும் வெளியிடுகின்றது. இதை எண்ணி பெருமகிழ்வு அடைகின்றேன்.

"ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது" என்பது முன்னோர்கள் வாக்கு. எனவே மாணவர்கள் நூற் கல்வியுடன் நின்றுவிடாமல் இணை பாடவிதானச் செயற்பாடுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் மாணவர்கள் சிறந்ததொரு இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு சேவைக்கழகம் துணை புரிகின்றது. சேவைக்கழகம் அங்கத்தவர்களின் தலைமைத்துவப் பண்பையும் சேவை மனப்பாங்கையும் வளர்ப்பதோடு. அவர்களின் உள்ளாந்த ஆற்றலையும் வெளிக்கொணரச் செய்கின்றது.

எமது கழக அங்கத்தவர்களின் திறனை வெளிக்கொணரும் பொருட்டு அவர்களது ஆக்கங்களால் உருவாக்கப்பட்ட "மனிதம்" இதழ் இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது. இது காலச்சக்கரத்தின் மாற்றத்திற்கேற்ப புதியபுதிய விடயங்களையும் கவிதைத் தொகுப்புக்களையும் அறிவுசார் பல்சுவை ஆக்கங்களையும் தாங்கி மாணவர்களின் அறிவுத்திறனை பெருக்கும் சாதனமாக காணப்படுகின்றது.

இவ் இதழினை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் அளித்த கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம். அத்துடன் எமது கழகத்தின் மூலவேராக திகழும் கழகப் பொறுப்பாசிரியர் திரு.வ.தவகுலசிங்கம் அவர்களுக்கும் ஆக்கங்களை சமர்ப்பித்த அங்கத்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் இனிவரும் காலங்களிலும் மேலும் சிறப்புற இப்பணி தொடர வேண்டும் என இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.



**ப.லக்ஸ்மன்**
**இதழாசிரியர்**

# Our Principal



**Mr. V .Ganesarajah**

# Our Deputy Principals



Mr. P.Ganathesigan



Mr. S. Nimalan

# Our Vice Principal



Mrs. S. Surenthiran

# Our Committee Members

**President**



Mas.U.Mirojan

**Secretary**



Mas. R. Birunthan



**Staff Advicer**

Mr.V. Thavakulasingam

**Treasurer**



Mas.M. Nanthanan

**Editor**




Mas. P. Luxman

## Auditor



Mas. G.Kayanan

## Vice President




Mas. S. Thiriyambaga sarma

## Vice Secretary



Mas. S. Thuvarahan

## Administrative Officer



Mas. S.Tharsan

## Duty Incharge



Mas. P. Hariraj

## Store keeper



Mas.T . Sivajeevan

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

வடக்கின் பெரும் விருட்சமாய்
கிளை பரப்பி நிற்கும் இந்துவே
உன் சேவையால் இன்று நீ
உன்னதமாய் நிற்கின்றாய்

உன்னிடம் தஞ்சம் புகுவோரை
கல்வி மாத்திரம் புகட்டாது
வாழ்வினிற்கினியதாய் நல்லொழுக்கமும்
ஊட்டுகிறாய்

இவ் உலகிற்குப் பல
அறிஞரைத் தந்து அகங்காரம்
எனும் பாவம்கொள்ளாது
சுயநலமில்லாது நிற்கிறாய்

அருவி மலையிலிருந்து குதித்து
வருவது போல
உன்னிடமிருந்தே கல்வி எனும்
நீர் எமக்கு வருகிறது




நீ கல்வி எனும் ஏணியில்
மட்டும் ஏறாது
போட்டி கலையிலுமே என்றென்றும்
உனக்கே முதலிடமே

நீ உன் புகழ் எனும்
அந்தஸ்தை கொண்டு
இவ்வுலகில் யாருக்குமில்லாத
பெருமையை தேடிக் கொண்டாய்

உன்னாலே இன்று உலகின்
எந்த நாட்டிலும்
தற்பெருமையுடன் நடமாடும்
மைந்தர்களே உன்னை மறப்பாரோ!

நமக்கெல்லாம் நல்வழியாய்
நமக்காக பாடுபடும்
இந்து அன்னையே நீ
நீடூழி வாழ்க

**ஆக்கம் ஶ்ரீ.நிக்ஷனன்**
**தரம் 11**

# சேவைக்கழகம்

சேவையே சேவை – அந்த
சேவைக் கழகத்தின் சேவை
பாவை போலிருந்த எம்மை
பாரை ஆழ வைத்த கழகம்

காலை ஈருளிகளை அடுக்குவதற்கு
காத்திருக்கும் கழகம்
மாலை நேரம் ஆனதும் - நல்ல
மாணவர்களை ஒழுங்காக அனுப்பும் கழகம்

பொது அறிவுகள் பலவற்றைத் தந்து
பல மொழிகள் கற்க வைக்கும் கழகம்
சாதுவாக எம்முடன் பேசி
சேவையில் ஈடுபட வைக்கும் கழகம்

எதுசரிஎது தவறெனப் போதித்து எம் மனதைக் கவரும் கழகம்
எம் மனதைக் கவரும் கழகம்
போதும் போதும் எனும் அளவிற்கு
பரீட்சை விடைத்தாளைத் தரும் கழகம்

எல்லோரையும் சமமாக மதித்து
எல்லோருக்கும் உதவு கழகம்
சில நேரங்களில் தவறுவிட்டுவிட்டால்
சினக்காமல் மன்னிப்புத் தரும் கழகம்

**ஆக்கம்: சிவானந்தன் சிவகரன்**
**தரம்** 9 B

# தாய்மையாகும் சேவை

தேவை அறிந்தொரு
சேவை செய்திடல் - ஞாலத்தில்
தாய்மை என்றொரு பேற்றுக்கு
நிகராம்!



துன்பக்கடல் தனில் துவண்டே
உருளும் இன்மை மனிதர் தமக்கு
செய்திடும் சேவை
உண்மையில் பெரியது உணர்வீரே!
சேவை செய்து இங்கு உயர்வீரே!

அன்னை தெரேசா செய்த சேவை
அகிலத்தில் அவரை
உயரத்தில் வைத்ததன்றோ!
அண்ணல் காந்தியும்
ஆற்றிய சேவை அனைவர்
உள்ளத்திலும் வைத்தது அவரையன்றோ!
இந்து அன்னைக்கு எம்மவர்
ஆற்றும் சேவை – பெற்ற தாய்க்கு
பெருமக்கள் ஆற்றும் சேவையன்றோ!



பெற்றவர் அல்ல மற்றவருமே தம்மக்கள்
என்றெண்ணி கற்றவர் வழங்கும்
கல்வியெனும் சேவை உற்றது உலகில்
உயர்ந்தது அன்றோ!
பெற்று அதை நாமும் தந்தவர் தமக்கு
செய்யும் சேவை தலையாயது தானே!

**ஆக்கம் வி.மகாசேனன்**
**தரம்** A/l (2013)


# ஜப்பான் அணு உலை வெடிப்பு

ஜப்பானில் அணு உலை விபத்து நிகழ்ந்தது அதன் மூலம் உலகின் பல நாடுகளிலும் கதிரியக்கம் பரவுவதாக பல வதந்திகள் வலம் வருகின்றன. மீடியாக்கள் தாங்கள் எதை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்பதை விடுத்து திரித்து சில செய்திகளை மட்டும் பெரிதாக்கி வெளியிட்டு வருகின்றன.

வழக்கம் போல மக்கள் இப்போ அரசியல்வாதிகள் செய்யும் கூட்டணி கூத்தால் சிரிக்கவா? இந்த கதிரியக்கம் பற்றி கவலைப்படுவதா? என்ற யோசனையில் இருக்கிறார்கள். அரசியல் குழப்பத்தை தெளிவுபடுத்த என்னால் இயலாது.

ஒரு சின்ன அசம்பாவிதம் நடந்துவிட்டால் போதும், அதைப்பற்றிய பல புரளிகள் கிளப்பி விட்டு மக்களை குழப்பத்திலும், தேவையற்ற சஞ்சலங்களிலும் ஆழ்த்து வதில்தான் நம்மவர்களுக்கு எவ்வளவு இன்பம்?! இப்படித்தான் 2000இல் உலக அழிவு என்று சொன்னாங்க, அப்புறம் மிகச்சமீபத்தில் 2012, 21டிசம்பர் அன்றைக்கு உலகம் அழியப்போகுதுன்னு ஒரு புரளியைக் கிளப்பிவிட்டு அது இன்னும் சக்கைப்போடு போட்டுக்கொண்டிருக்கிறது.

அந்த வரிசையில் இப்போ அணு உலை பாதிப்புகளால் நிலைகுலைந்து போனது ஜப்பான் அணுஉலை இருக்கும் கட்டிடங்களின் கூரைகள் வெடித்ததை அடுத்து உலையே வெடித்துச் சிதறிவிட்டது, அதனால் சுற்றுச்சூழலில் கதிரியக்கம், உலகெங்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க எண்ணி ஜப்பான் நாட்டில் பணிபுரியும் இந்திய அணு விஞ்ஞானி திரு.அனிர்பன் பந்தோபதியாய ஒரு விளக்கமளித்திருக்கிறார். அது பின்வருமாறு.



சுனாமி தாக்கியதும் ஜப்பானில் உள்ள அணு உலைகளின் உற்பத்தி உடனேயே நிறுத்தப்பட்டு விட்டதால் கதிரியக்க தொடர் வினைகள் எதுவும் அதில் இல்லை தொடர் வினைகள் இருந்து கொண்டே இருந்ததால் மட்டுமே அணுஉலை வெடிப்பதற்கு சாத்தியம் உண்டு. எனவே ஜப்பானில் அணுஉலை வெடிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை. செர்னோபில் விபத்து போன்றதொரு நிகழ்வு நடக்க வாய்ப்பு இல்லை.

தற்போது ஜப்பானில் உள்ள அணுமின் நிலையத்தில் வாயுக்கள் வெளியானதாலும் சுற்றுப்புற தட்ப வெட்ப மாற்றங்களாலும் கட்டிடங்களின் கூரைகள் மட்டுமே தற்போது வெடித்துள்ளன. அணுஉலை பயன்பாடு முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டதால் கதிரியக்கம் பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை. ஏனென்றால் அணுஉலை சூடாவதும், கதிரியக்கம் வெளியாவதும் இரு வேறு தனிதனி நிகழ்வுகள்

மேலும் நாம் அனைவருக்கும் இருக்கும் ஒரு சந்தேகம், காற்றில் கதிரியக்கம் பரவுவதை பற்றி வெளிவரும் செய்திகள். நாம் சில அடிப்படையான விசயங்களை அறிந்து கொணடால் இதைப் பற்றி வரும் வதந்திகளைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

நம் உடல் உறுப்புகளை தாக்கும் கதிர்வீச்சுகளில் அயோடின் கதிர்வீச்சு மட்டுமே ஆபத்தானது.

யுரேனியம் போன்றவை உடனடியாக எவ்வித விளைவுகளையும் ஏற்படுத்தாது. தொடர்ந்து மிகமிக அதிக அளவிலான கதிர்வீச்சு உடலில் பரவி வந்தால் மட்டுமே உடல்நல பாதிப்புகளை உருவாக்கும் ஜப்பானிலுள்ள அணு உலைகளில் உள்ள மொத்த யுரேனியத்தின் அளவு அதைவிட குறைவாகவே இருக்கும்.

அயோடின் கதிர்வீச்சு பற்றிய சில உண்மைகள்

எதிர்காலத்தில் இதனால் பாதிப்பு வரலாம் என்றும் உடல் உறுப்புகள் பாதிக்கலாம் என்ற அச்சம் இருந்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அயோடின் குறைபாடு நமக்கு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் உடம்பில் அயோடின் சத்து குறைவாக இருந்தால் காற்றில் உள்ள அயோடினை உடம்பு உறிஞ்சும். அப்படி உறிஞ்சப்படும் அயோடினில் கதிர்வீச்சு இருந்தால் நம்உடல் பாதிக்கப்படும்.

எனவே அயோடின் நிறைந்த உணவுகளை நாம் எடுத்துக்கொண்டால் நலம், கதிர்வீச்சு அபாயத்தில் இருந்து நம்மை தற்காத்துக் கொள்ளலாம்.

**ஆக்கம் : உ.மிரோஜன்**

**உயர் தரம் 2012**

# இன்றைய உலகில் நனோ தொழில்நுட்பம்

நனோ என்னும் சொல்லானது கிரேக்க மொழியில் குள்ளன் என்ற பொருளைத் தருகின்றது. இதிலிருந்து நனோ தொழினுட்பவியல் என்பது மிகச்சிறிய பொருளுடன் தொடர்புபடுத்தி செய்யப்படும் ஒரு செயன்முறை என விளங்கி கொள்ளமுடியும்.

நம் வெற்றுக்கண்ணுக்கு புலப்படாத சிறிய பொருள்களின் பருமனை அளப்பதற்கு நனோ மீற்றர் பயன்படும். நனோ மீற்றர் என்பது ஒரு மீற்றரின் பில்லியனின் ஒரு பகுதியாகும். (0.000000001m/ $10^{-9}$m) ஆயினும். நனோ தொழில் நுட்பவியல் நனோ துணிக்கையை நனோ ரோபோக்கள். மருந்துகள். நனோ கணினிகள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒரு நனோ மீற்றர் விட்டம் கொண்ட நுண்துணிக்கைக்கும் ஒரு மீற்றர் விட்டம் கொண்ட பொருள் ஒன்றுக்கும் இடையிலான விகிதம் காற்பந்தின் விட்டத்திற்கும் புவியினது விட்டத்திற்கும் இடையிலான விகிதத்திற்குச் சமனானதாகும். இவ் நனோ தொழில் நுட்பவியல் பற்றி தமது கருத்துக்களை முதன் முதலில் வெளியிட்டவர் நோபல் பரிசு பெற்ற பௌதீகவியல் விஞ்ஞானியான ரிச்சாட் பேர்மன் ஆவார்.

### நனோ தொழினுட்பவியலின் பயன்பாடுகள்

01. மருத்துவத்துறை

நனோ தொழில்நுட்பவியல் மூலம் காயங்களை மறைக்கும் பந்தனம். சத்திரசிகிச்சை உபகரணங்களில் பூ சப்படுகின்ற நுண்ணங்கி தொற்று ஏற்படுவதை தடுக்கும் நனோ நுண்ணுயிர் கொல்லிப் பூ ச்சு. வடிகட்டுதல் போன்ற செயற்பாடுகளில் பயன்படுத்த முயற்சியும் மேற்கொள்ளப்படுகின்றன.

02. நுகர்வுப் பொருட்களை தயாரித்தல்

நனோ தொழில்னுட்பவியலின் மூலம் நிறம்மாறக்கூடிய உடை. குளிர்,சூடு என்பவற்றை தாங்கக்கூடிய உடை. உயர்தரம் கொண்ட காலுறை என்பவற்றின் தயாரிப்புக்கு இத்தொழில்நுட்பம் பயன்படுகின்றது.

நனோ தொழினுட்பவியல் மூலம் தயாரிக்கப்பட்ட டெனிஸ் மட்டை. கொல்ப் மட்டை. பட்மின்ரன் மட்டை என்பவை உறுதியானதாகவும் வளையாததாகவும் துல்லியமானதாகவும் காணப்படுவதால் இருவிளையாட்டில் ஈடுபடுபவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

### நனோ தொழில் நுட்பவியலினால் ஏற்படும் பாதிப்புக்கள்

அநேக தொழினுட்ப முறைகளில் நன்மையான விளைவுகளைப் போல் தீமையான விளைவுகளும் தோன்றுகின்றன. நனோ தொழில்நுட்பமும் அம்மாதிரியானதே.

நனோ துணிக்கைகள் மண். நீர். வளி என்பவற்றுடன் சேரலாம். இதனால் இவை மனிதன் உட்பட ஏனைய அங்கிகளின் உடலினுள் செல்லலாம். இதனால் அங்கிகளில் சுகாதாரப் பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளமை பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

நனோ தொழில்நுட்பவியல் மூலம் நச்சுத் தன்மையான இரசாயன பொருள்களை உற்பத்தி செய்து போர்களில் ஆயுதங்களாக பயன்படுத்தலாம்.

எதிர்காலத்தில் மனிதர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைக்கு தீர்வுகான இத் தொழில்நுட்பம் பெருதவியாக அமையும் இவற்றால் தோன்றும் பிரச்சனையை கட்டுப்படுத்த "பொறுப்புள்ள நனோ தொழில்னுட்பவியல் மத்திய நிலையம்" என்ற நிறுவனம் அமைக்கப்படவுள்ளது.

**ஆக்கம் : க.தாருசன்**

**தரம் : 11**

# நான்காம் உலகப்போர்

உலகமானது இதுவரையில் இரு உலக மகா யுத்தங்களை சந்தித்துள்ளது. அத்துடன் இனிவரும் காலங்களிலும் யுத்தங்களை எதிர்கொள்வது தொடர்பிலே பல நாடுகள் முனைப்பாக உள்ளன. அணுவாயுத வளர்ச்சியும் அதனது பரவலுமே மூன்றாம் உலக மகாயுத்தம் நடைபெறின் அதில் பெரும் பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை. மூன்றாம் உலக மகாயுத்தத்தில் பயன்படும் ஆயுதம் பற்றி அணுவிஞ்ஞானி ஐன்ஸ்ரீனிடம் வினாவிய போது அவர் "மூன்றாம் உலக மகாயுத்த ஆயுதம் பற்றி திட்டமாக கூறமுடியாது. எனினும் நான்காம் உலக மகாயுத்தத்தில் கல்லாயுதங்கள்தான் பயன்படும் என்பதை உறுதியாக கூறினார். இதனடிப்படையில் நான்காம் உலக மகாயுத்தத்தை கல்லாயுத யுத்தம் என்றே கூறிவிடலாம்.

நான்காம் உலக மகாயுத்தத்தில் கல்லாயுதங்கள் பயன்படுமாக இருப்பின் இப்போதைய தொழிநுட்ப வளர்ச்சியும் புதிய ஆயுதங்களும் அழிந்து விடுமா? என்பதிலே பெரும் சந்தேகம் நிலவுகின்றது. உலகமானது மீண்டும் கலாச்சக்கர சுழற்சியில் ஆதிகாலத்தினை நோக்கி செல்லும் என்ற மாதிரியிலான மாயா இனத்தவரின் எதிர்வு கூறலுடன் இது மிகவும் பொருந்துகின்றது.

பெரும்பாலும் இக் காலமாற்றமானது மூன்றாம் உலக மகாயுத்தத்துடனேயே இடம்பெறும் என எதிர்வு கூறப்படுகின்றது. மூன்றாம் உலக மகாயுத்த இறுதியில் நவீன தொழினுட்ப கருவிகள் அழிவடையும் எனலாம். அவ்வாறு அவை அழியாவிடினும் அதற்கு எதிரும் நிகருமானதொரு கண்டுபிடிப்பின் மூலம் அவை மழுங்கடிக்கப்படக்கூடும். அதற்கு தற்போதைய விஞ்ஞான வளர்ச்சி வித்திடும். இன்று தொடர்பாடலை குழப்புவதற்கு மின்காந்த அலைகள் சில பயன்படுவது போல பல யுத்திகள் கையாளப்பட முடியும்.

அவ்வாறே நான்காம் உலகப்போர் இடம்பெறின் அதன்மூலம் ஏற்படும் அழிவு மற்றைய உலகப் போர்களின் அழிவை காட்டிலும் குறைவெனவே கூறிவிட முடியும். மாற்றங்களை மாற்றுவது முடியாததே ஆகவே தற்போதைய அணுவாயுத நாடுகள் அப்போரிலே பங்குபற்றுவதனை அதிகம் விரும்பாது ஏனெனில் அவை பல காலமாக நீடிக்க கூடும். நான்காம் உலகமகாயுத்தம் என்பது தற்போதைய காலத்தை பொறுத்தவரை கற்பனை யுத்தமாகவே கருதப்படும்.

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்று இது மாணவர்களுக்கு கல்வி புகட்டும் பாடசாலையாக மட்டுமன்றி ஒரு தேசிய எழுச்சியின் ஒரு சின்னமாகவும் விளங்குகிறது. 1887ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி கடந்த சில பத்தாண்டுகளாக பல்கலைக்கழகங்களின் பல துறைகளுக்கும் பெருமளவு யாழ்ப்பாண மாணவர்களை அனுப்பும் முதன்மை நிறுவனமாகவும் உள்ளது. இதனால் நாட்டில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பல உயர் பதவிகளையும் இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் வகித்து வருகின்றனர். இன்று பெருமளவில் யாழ்ப்பாணத்து மக்கள் வெளிநாடுகளில் வசித்து வருவதால் இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களும் பல நாடுகளில் காணப்படுகின்றன. 1960களில் பெரும்பாலான பாடசாலைகள் பொதுவுடமை ஆக்கப்பட்டதில் இருந்து இலங்கை அரசின் பொறுப்பில் இயங்கி வரும் யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்பதற்கு மாணவர்களிடையே கடும் போட்டி உள்ளது.

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில் உருவான பாடசாலைகள் அனைத்தும் கிறிஸ்தவ மிஷன்களாலேயே நடாத்தப்பட்டு வந்தன. இப்பாடசாலைகள் மேல்நாட்டார் கல்வி முறையை அறிமுகப்படுத்தின. ஆங்கில மொழி மூலம் கல்வி புகட்டிய இந்தப் பாடசாலைகள் கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதையே முக்கிய நோக்கமாக கொண்டிருந்தன. இதனை எதிர்த்துத் தமிழ் மாணவர்களுக்கு அவர்களது பண்பாட்டு பின்னணியையே கல்வி புகட்ட வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டவர்களில் முதன்மையானவர் ஆறுமுகநாவலர் இவர் இதற்கென சைவ தமிழ் பாடசாலைகளை உருவாக்கினார். எனினும் இவை எதிர்பார்த்த அளவு வெற்றியை தரவில்லை. அக்காலத்தில் நிலவிய சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மேல்நாட்டுக் கல்வி ஆங்கிலக் கல்வி என்பவற்றையும் தக்க வைத்துக் கொண்டே சொந்த பண்பாட்டை முன்னிலை படுத்த வேண்டும் என்ற நிலை உணரப்பட்டது. 1888ம் ஆண்டில் ஆறுமுக நாவலரின் முயற்சியால் உருவான யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை தனது நோக்கங்களில் ஒன்றாக இந்து சமயச் சூழலில் ஆங்கில வழி கல்வி புகட்டும் பாடசாலைகளை உருவாக்கும் எண்ணத்தை வெளியிட்டது எனினும் கிறிஸ்தவ மிஸன்களின் எதிர்ப்பின் காரணமாக இவ்வாறான பாடசாலைகளை அமைப்பது இயலாத ஒன்றாக இருந்தது.

எனினும் எவ்வாறாவது பாடசாலை ஒன்றை தொடங்க வேண்டும் என்ற உள்ளூர் மக்களின் கனவு எதிர்பாராத ஒரு முறையில் நிறைவேறியது 1887ம் ஆண்டில் வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரம்பிள்ளை எனும் யாழ்ப்பாண தமிழ் கிறிஸ்தவர் ஒருவர் தேசிய நகர உயர் பாடசாலை ஒன்றை ( Native town high School) எனும் பெயரில் ஆங்கிலப் பாடசாலை ஒன்றை கிறிஸ்தவ மிஷன் தொடர்புகள் ஏதுமின்றி தொடங்கினர். இப்பாடசாலை கிறிஸ்தவப் பெரும்பான்மை மிக்க பிரதான பகுதியிலேயே அமைக்கப்பட்டது எனினும் இதனை நடாத்துவதில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக அக்காலத்தில் பெயர் பெற்ற வழக்கறிஞரில் ஒருவரும் பண வசதி படைத்தவருமான எஸ்.நாகலிங்கம் என்பவரின் துணையை சிதம்பரபிள்ளை நாடினார் அதனை ஏற்றுக்கொண்ட நாகலிங்கம் அதன் காப்பாளராக இருந்து அதன் நடவடிக்கையில் மிகுந்த அக்கறை காட்டினார். 1889ம் ஆண்டு பாடசாலை முழுமையான நாகலிங்கம் அவர்களிடம்

ஒப்படைக்கப்பட்டது. பாடசாலையின் புதிய உரிமையாளரான நாகலிங்கம் இந்து மக்கள் பெரும்பான்மையான வண்ணார்பண்ணைப் பகுதிக்கு இடம் மாற்றினார் இதன் பெயரும் நாகலிங்கம் நகர உயர் பாடசாலை (Nagalingam Town High School) என பெயர் மாற்றப்பட்டது. நாகலிங்கம் இந்து சமயத்தவர் சைவ. பரிபாலன சபையை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர் இதனால் அவர் தனது பாடசாலையை சைவ பரிபாலன சபையின் மேலான்மையின் கீழ் கொண்டுவர விரும்பினார் இதங்கிணங்க 1890 ஆகஸ்ட் 19ம் திகதி சபையின் தலைவர் தா.செல்லப்பிள்ளை என்பவரின் தலைமையில் கூடிய செயற்குழு பாடசாலையை பொறுப்பேற்க எண்ணியது. பாடசாலையின் பெரும் அவ் ஆண்டிலேயே இந்து உயர் பாடசாலை ( Hindu high school) என மாற்றப்பட்டு தற்போதுள்ள இடத்தில் ஒரு தற்காலிக கட்டடத்தில் இடம் மாற்றப்பட்டது நாகலிங்கம் அவர்களே இதன் முதல் மேலாளராகவும் பொறுப்பேற்றார். 1892இல் வில்லியம் சிதம்பரம்பிள்ளையின் மகன் என்.செல்லத்துரை இதன் தலைமை ஆசிரியரானார்.

பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் தேவைப்பட்டது. இதற்கென நிலம் வழங்கப்பட்டது. கட்டடங்களுக்கான நிதி உள்ளூரில் வீடுவீடாக திரட்டப்பட்டது. இந்து வணிக நிறுவனங்களும் தாராளமாக உதவின 100 ஆண்டுகளைத் தாண்டி இன்னும் நிலைத்திருக்கும் கட்டிடம் செப்ரெம்பர் 28. 1895ம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. நவம்பர் 1909ல் என்.செல்லத்துரை கண்டி திரித்துவ கல்லூரிக்கு இடம்மாற்றம் பெற்றுச் சென்றார் ஜி.சிவா ராவ் ( Mr.G.Siva Rav) என்பவர் இக்கல்லூரிக்கு தலைமை ஆசிரியரானார் மே 30. 1910ல் மாணவருக்கென விடுதி (Boarding house) திறந்து வைக்கப்பட்டது. சுவாமி விவேகானந்தர் மகாத்மா காந்திஜி முதல் இன்றிருக்கும் குருஜி ஸ்ரீ ரவிசங்கர் வரை பல ஆன்மீக பெரியார்கள் யாழ் இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்து சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

### இப்பாடசாலையின் அதிபர்கள்

| | |
|---|---|
| எஸ்.கோதமன் அப்பாப்பிள்ளை | 1890 – 1892 |
| என்.செல்லத்துரை | 1892 – 1909 |
| ஜி.சிவராவ் | 1910 – 1913 |
| பி.சஞ்சீவராவ் | 1913 – 1914 |
| என்.செல்லத்துரை | 1916 – 1926 |
| டபிள்யு.ஏ.கிரளபே | 1926 – 1927 |
| எம்.சபாரத்ன சிங்க்ஹ | 1927 – 1928 |
| வி.ஆர்.வெங்கட ரமணன் | 1928 – 1933 |
| எ.குமாரசுவாமி | 1933 – 1952 |
| வி.எம்.ஆசைப்பிள்ளை | 1952 – 1961 |
| சி.சபாரத்தினம் | 1962 – 1964 |
| எம்.கார்த்திகேசன் | 1971 – 1971 |
| ஈ.சபாலிங்கம் | 1971 – 1975 |
| பி.எஸ்.குமாரசுவாமி | 1975 – 1984 |
| எஸ்.பொன்னம்பலம் | 1984 – 1990 |
| எஸ்.குகதாசன் | 1990 – 1991 |
| அ.பஞ்சலிங்கம் | 1991 – 1996 |
| அ.சிறிக்குமரன் | 1996 – 2005 |
| வீ.கணேசராசா | 2005 இன்றுவரை |

**ஆக்கம் : ஸ்ரீ.நிஷனன்**

**தரம் 11**

# சேவையின் தேவை

சேவை என்பது பயன்கருதி செய்யப்படும் ஒன்றல்ல எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி முழுமனத்துடன் ஒரு செயலை செய்யும் போது அது சேவை எனப்படுகின்றது. சேவை என்பது ஒருவரது தேவையை நிறைவேற்றுவதற்காக செய்யப்படுவதாகும். மக்களுக்குச் செய்யும் சேவையானது இறைவனுக்குச் செய்யும் சேவைக்கு ஒப்பானதாகும். சேவை என்பது வரையறைக்கு உட்படாத ஒன்றாகும். அது எப்போதும், யாராலும், யாருக்காகவும் செய்யக்கூடிய ஒன்றாகும். மாணவப் பருவத்தில் நாம் செய்யும் சேவையானது எம்மை ஒரு சிறந்த குடிமகனாக உருவாக்குகின்றது.

நாம் சிறந்த மாணவர்களாகத் திகழ வேண்டுமானால் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு எந்த வகையிலாவது பங்களித்திருக்க வேண்டும். இத்தருணத்தில் இந்துவின் மைந்தன் என்ற வகையில் எனது பாடசாலைக்கு என்னாலான சேவையை வழங்க வாய்ப்பளித்த எமது பாடசாலை சேவைக்கழகத்திற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாணவப் பருவம் என்பது ஒரு குறுகிய காலமே ஆகும். இக்குறுகிய காலஎல்லைக்குள் எம்மாலான சேவைகளை நாம் செய்வதன் மூலம் அர்ப்பணிப்பு, தியாகம், ஒற்றுமை, தலைமைத்துவம் ஆகிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும்.

தன்னலம் கருதாது ஒருவர் பிறருக்கு செய்யும் சேவை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அன்னை தெரேசா, புளோரன்ஸ் நைட்டிங்கேள் என்பவர்கள் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்திருப்பதற்கான காரணம் அவர்களால் மனித குலத்திற்கு செய்யப்பட்ட சேவையே ஆகும். நாம் எந்தவொரு சேவையையும் பயனை எதிர்பார்த்துச் செய்யக் கூடாது. பயனை எதிர்பார்த்துச் செய்வது சேவையல்ல அது ஒரு வியாபாரம். இதனையே பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" எனக் கூறியுள்ளார்.

நாம் இப்பொழுது இருப்பது மாணவப் பருவத்திலாகும். இக்காலப்பகுதியில் நாம் எம்மாலான சேவைகளை பாடசாலைக்கு வழங்க வேண்டும் "எவ்விட மேகினும் எத்துயர் நேரினும் எம்மன்னை நின்னலம் மறவோம்" என்ற உமது கல்லூரிக்கீத வரிகளை நாம் என்றும் நினைவிற் கொள்ள வேண்டும். நாம் எமது கல்லூரிக் காலத்தில் கல்லூரிக்கு செய்யும் சேவையானது எதிர்காலத்தில் ஒரு சிறந்த வாழ்வுக்கு வித்திடும் என்பதில் நாம் எதுவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. எனவே மாணவர்களாகிய நாம் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதைக் கருத்திற் கொண்டு எமது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் எம்மாலான சேவை செய்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

**ஆக்கம் : ச.யாழரசன்**

**தரம் : 9**

# Importance of Service Club

As we are the students of Jaffna Hindu College we must be proud of our Service club It is rendering a great service for the development of our school. Our service club is not profit minded. We are doing our service just for the betterment of our school. Infect every member of our club must be proud to say as the members of service club "Service to mankind is to God" So without any he situation we must perform our duty with dedication.

When doing our service as the member of service club we can get many useful experiences, which can help us in our future life our service club is directing us in a good way in the path of life. It teaches many good things to us. Perfection, dedication, timeliness and accuracy are some good moralities which I have learnt from Service club.

Service is not something doing for profit, Service must be done without any expectation. Now we are the students of Jaffna Hindu College. One day we must leave this great school. Before leaving we must do anything for the betterment of our school. As a student it is our responsibility. Our school has given a lot of things for us in return we must do even a single good thing for school. We are debtors for school. We can finish this debt by serving for school.

Service makes a man perfect. We must do our service perfectly. It we do our service with dedication one day we can become a good citizen for the country.

**Sathiyenthra Jalarasan**

**Grade : 9**

# வெடிகள்

இன்று எந்த ஒரு விழாவும் வெடிகள் இல்லாமல் நிகழ்வது இல்லை என்ற நிலையில் வெடிகளின் பாவனை நிலை அதிகரித்ததொன்றாக இருக்கிறது. சிறியவர் பெரியவர் என்ற பாகுபாடின்றி இதில் சந்தோசம் காண்பவர்களில் வேறுபாடு இல்லாது அனைத்து வயதினரையும் கணிசமானளவிற்கு கவர்ந்துள்ள இந்த வெடியின் வரலாறு என்ன அதனை எப்படி உருவாக்குகின்றனர் மற்றும் உபயோகிக்கின்றனர் என்பவற்றை பார்ப்போம்.

தற்போதைய இந்த வெடிகள் விளையாட்டுத் துப்பாக்கி போன்றது. துப்பாக்கியை கண்டவுடன் அதை விரும்பும் பிள்ளைக்கு விளையாட விளையாட்டுத் துப்பாக்கி வாங்கிக் கொடுத்த அதே கதைதான் முன்னைய காலத்தில் இந்த வெடியின் கதையும்.அடிப்படை நெருப்புத்தான் இதன் தோற்றம் ஆரம்பகால தீபரப்பும் சாதனங்களின் முடிவாக கண்டு பிடிக்கப்பட்டது. ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த குகைக்கால மனிதன் காய்ந்த மரங்களை உரோய்ந்து தீயை உருவாக்கி குளிர் காய்ந்தான். அப்பொழுது தீப்பொறியானது சுவாலையாக எரிகிறது. ஆனால் கடந்த 250 ஆண்டுகளுக்குள் அது மிகப்பெரிய சக்தி எனவும் சுவாலையும் சுடரும் ஒரு உஷ்ணமான வாயுக்களின் பகுதி எனவும் சரியாக கண்டுள்ளனர். இதன் மேம்பட்ட ஒரு பாவனையை நாம் பார்க்க வேண்டுமென்றால் 1400 வருடங்கள் முன் கிரேக்கர்கள் இயற்கையாக விளையும் பெற்றோலியம், நைப்தா ஆகியவற்றைக்கொண்டு நேபாம் எரியூ ட்டியாக உபயோகித்ததை நாம் அறியலாம். இதே முறையை அன்றைய பேரியலாளர்கள் கடைப்பிடித்தனர். அதனால் எதிரிகளைக் கடலிலும் அழித்தனர். இதனால் மனித உயிர்கள் அழிவும் தடுக்கப்பட முடியாததாகும்.

தீயின் வரலாறு எப்படி வெடிகளுடன் சம்பந்தம் ஆனது என்றால் அதுவும் ஒன்றை தேடப்போய் தான் ஆகும். எட்டாம் நூற்றாண்டில் உலகில் எல்லா இடத்திலும் மனித ஆயுள் நீடிப்பதற்கான மருந்து பற்றிய ஆராய்ச்சி நடந்த போது சீனாவின் இரசாயனவியலாளர்களும் அதில் ஈடுபட்டனர். வழிவழிச் செய்திகளின்படி அவர்களின் ஆராய்ச்சியில் எண்ணை வகைகள் தேன் மெழுகு போன்றன பல இருந்தன. வெடிகளைப் பற்றி தெரிந்தவர்கள் அதில் வெடியுப்பும் கந்தகமும் அடங்கியிருப்பதை அறிவர். கசப்பு சுவையை தனதாக்கிக் கொண்ட இனிக்கும் தேனில் இவையிருப்பதை அன்று அவர்கள் முதலில் அறியவில்லை. ஆனால் அவர்கள் வடித்து வைத்திருந்த தேன் அதிக வெப்பத்தினால் ஆவியாகிவிட்டதன் பின் அதில் மீதியிருந்ததில் அடங்கியிருந்தவை திடீரெனத் தீச்சுவாலையாகியதை கண்டார்கள் சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்ட இந்நிகழ்ச்சி, பரிசோதனைகள் மூலம் உருகிய கந்தகமும் தேனில் மீந்திருந்த பொருளில் அடங்கியிருந்த பொற்றாசியம் நைத்திரேற்றிலுள்ள ஒட்சிசனால் "புறவெப்பமுறை இரசாயன இயக்கத்தால்" ஒக்சியேற்றப்படுவதற்கு அடிப்படை இயக்குசக்தியாகி விடுகிறது என்பதையும் அதிலிருந்து வீரியமான வெப்பம் மூலம் தீ மின்னற் சுவாலையாக ஏற்படும் என்பதும் தெரிய வந்தது. இங்கு தீ சுவாலையாவதற்கு வெளியிலிருந்து காற்றின் ஒட்சிசன் துணை செய்யும். நீண்ட நாள் முயற்சியில் சீனா இதனை வெற்றிகரமாக கண்டுபிடித்தது. அழிவாயுத தோற்றமாக வெடிகள் தான் வடிவம் பெற்று இருந்தது என்பதை மனதில் இருத்தி சமுதாயத்தைக் காப்போம்

**ஆக்கம் : பா.வாசவன்**

**தரம் : 9**

# கறுப்பு வெள்ளை உலகு

உலகின் வல்லரசு எதுவென்று கேட்டால் சிறு குழந்தையும் 'அமெரிக்கா' என்றுதான் கூறும். வளங்கள் நிறைந்த ஒரு நாடு. பாய்ந்து ஓடும் அருவிகள். நீர் நிலை குன்றாத வாவிகள் எல்லாவிதத்திலும் மேலாக மனிதவளம் இவற்றிலும் மேலாக கருச்சக்தியை அழவிற்கோ ஆக்கத்திற்கோ பயன்படுத்தியது ஆயினும் இதன் வரலாற்றில் கரும்புள்ளி அது யாதெனில் அது கரும்புள்ளியேதான்

பிரித்தானியா இடம் ஆளுமையாய் இருந்த நாடு அமெரிக்கா ஆயினும் ஜோர்ஜ்வொஜிங்டன் முதலானோரால் சுதந்திர காற்றைச் சுவாசித்தது. ஆயினும் அடிமை முறையொன்றை வைத்திருக்கும் கலாசாரம் மட்டும் எப்படியோ பூ த்து விட்டது. இவ்வாறாயினும் தமது பிரதான உற்பத்தியை விளைய செய்ய அமெரிக்கர்களிற்கு விருப்பமில்லை என்ன செய்வது? இருண்ட கண்டத்தில் ஒளிந்துள்ளவரை தூக்கி கொண்டு வந்தனர் அகிலத்தை ஆளவுள்ள நாட்டில் அடிமை சாசனம் 1619 ஆகஸ்ட் 20ல் கறுப்பர்களுடன் அமெரிக்கா ஜேம்ஸ்டவுனில் ஆரம்பமானது. கறுப்புபோரின் ஆரம்பம் அதுவாகும். இவர்களில் சிலர் பண்ணை வேலைக்கும், வீட்டு வேலைக்கும் அமர்த்தப்பட்டனர். இருவேளை உணவு. இரண்டு உடைகள் பால் வேறுபாடு காட்டி வேலை வாங்கினர். எதிர்த்தால் இழிவான முறையில் தாக்குதல் பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களும் உள்ளனர்.

## விளைவு?

1654ல் ஜான் கேஸர் என்ற அடிமை தனது முதலாளியின் மீது வழக்கு பதிந்தான் ஆயினும் நீதிதேவதை பார்வை பெற்றாள். Slave Court தோன்றியது புதிய சட்டம் தோன்றின. ஆயினும் 1777ல் வெர்மன்டயானிலர் அடிமை முறையை ஒழித்தது. 1860ல் அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் அடிமை முறையை ஒழிக்க பிரேரனை முன்வைக்க தென்கரோலினா உட்பட 12 மாநிலங்கள் எதிர்க்க உள்நாட்டு போர் ஆரம்பமாகியது. 1860 லிங்கன் அமெரிக்க அடிமைகள் சுதந்திரமானவர்கள் என அறிவித்தார். 1865ல் அடிமை முறை ஒழிக்கப்பட்டது. ஆயினும் சமதர்ம நீதி வழங்கப்படவில்லை. வெள்ளையர்கள் உயர்வானோர் கறுப்பினர் தாழ்வானோர் மாட்டின் லூதர்சிங், மாலகர் எக்ஸ் போன்றோரால் மீண்டு போர் துவங்குகின்றது. உரிமைக்கான போர் அபிலாசைக்கான போர் 1965ல் மால்கபி எக்ஸ் சுட்டுக்கொல்லப்பட்டார். 1968 மார்டின் லூதர்சிங் ஜீனியர் சுட்டுக் கொல்லப்பட்டார். குருதி, வியர்வை சிந்த பெறப்பட்டது வெற்றி.

அமெரிக்கா மொத்த சனத்தொகையில் 12.3% இவர்களின் 1990ல் டக்ளஸ வைல்டர் முதல் கறுப்பின மாகாண ஆளுனர் ஆனார். 1992ல் கரோல் மோஸ்ல பிரான் முதலாவது பெள் கறுப்பின செனட்டரானார். 2001ல் காலின் பவெல் ஜோர்ஜ் புஷ் ஆட்சியில் வெளியுறவு அமைச்சரானார். 2005ல் கொண்டலீஸா ரைஸ் என்ற பெண் ஜோர்ஜ்புஷ்ஷின் வெளியுறவு அமைச்சரானார்.

மேலாக 2008ல் முதல் கறுப்பின சிறுபான்மை அதிபராக பராக் ஒபாமா தெரிவு செய்யப்பட்டார்.

அடிமைகள் போராடி வென்றனர் ஒரு வெற்றி.

"பாதையுள்ளது பயன்படுத்துவோம் - தோழா<br>
ஒரு உலகு படைக்க"<br>
ஒன்றுபட்டு நாமும் ஒரு படைப்பை படைப்போம்.

**ஆக்கம் : ஜெ.ஆரூரன்**<br>
**தரம் : A/L 2014**

# கல்லூரி நட்பு

எங்கோ பிறந்து
எங்கோ வளர்ந்து
இப்போது அனைவரும் இங்கே
சந்தித்து கொண்டோம்
இதயத்தை நட்பாலே
சிந்தித்து கொண்டோம்

முகங்களை பற்றி
யோசித்ததுமில்லை
இனம் பணம் பார்த்து
நேசித்ததுமில்லை
ஏமாற்றங்கள்
சிறிதும் இல்லை

கருத்துகளை பரிமாறி
மற்றவர் பாராட்டை பெறுவோம்
சிறுசிறு சண்டைகள் இட்டு
சமாதானத்திற்கு வருவோம்


கவலைகளை கிள்ளி எறிந்து
இலட்சியங்களை சொல்லி மகிழ்வோம்
உழைப்பை பெருக்க
உற்சாகம் தருவோம்
நலத்தை பெருக்க
நம்பிக்கை தருவோம்

நன்மைகள் வளர முயற்சிப்போம்
நட்பால் உயர்ந்து
சாதிப்போம்



ஆக்கம் : ச.கஜந்தன்
தரம் 11

# விஞ்ஞானமே ஒரு நொடி நில்



எல்லையற்ற விந்தைகள் செய்யும் விஞ்ஞானம்
தொல்லையற்ற சிந்தனை தரும் மெய்ஞானம்
பூ மி முதல் புளூட்டோ வரை உன்ஞானம்
இயற்கையை வென்ற மஹாஞானம்

உயிர் காக்க மாற்று இதயம்
இது உன் புது உதயம்
ஓசோன் தாண்டியும் ஒக்சிசன் தந்து
ஆழ்கடல் அடியிலும் ஒக்சிசன் தந்தாய்

அணுவைத் தந்தது விஞ்ஞானம்
நாகசாகியை அழித்தது அஞ்ஞானம்
அணுமுதல் அண்டம் வரை உன் வேகம்
குழந்தையும் அறிந்திடும் உன் தாகம்

தீக்குச்சி தந்தாய் சமைப்பதற்கு
ஜலற்றின் குச்சிகள் அவை நமக்கெதற்கு?
மருந்துகள் தந்தாய் நோய் மாற்றுவதற்கு
சயனைட் குப்பிகள் எதை மாற்ற?



சந்தன தென்றலின் பாதையில்
கந்தகத் தென்றல் எதற்கு
குந்தகம் செய்யும் காபன்
இவை உலகிற்கு சாபம்.

ஓசோனில் துவாரம் வந்தது
துருவங்கள் கடலில் கலந்தது
வாழ்வென்று உன்னை நினைத்தால்
தாழ்வென்றே மரணம் தந்தாய்

வானை இடிக்கும் கட்டிடங்கள்
வளியை கொல்லும் தொழிலகங்கள்
மரணம் சொல்லும் உன் திசைகள்
வலியை கொள்ளும் எம் மனங்கள்

அணுகுண்டு வெடிகுண்டு வேண்டாம்
மிதிவெடி கண்ணிவெடி வேண்டாம்
இனி அழிய புது ஹிரோசிமா நாகசாகி வேண்டாம்
அமைதியான புது வாழ்வு அது தருவாய் விஞ்ஞானமே

**ஆக்கம் : சொ.சாயிதன்**
A/L (2014)

# என் இனிய தமிழுக்கு

உன் மடியில்
கண்மூடித் தூங்கும்
குழந்தையின்
கண்மூடித்தூங்காத
கவலைகள்

உரத்த குரலே
இரத்த எழுத்தில்

தூங்க வைக்கும் தாலாட்டை
தூக்கிஎறி....
விழித்திருக்க....
வீர வரி வீசு

உனக்கு
தேசமில்லை என்று
கோஷம் போட்டவர்கள் - இன்று
தேசத்தின்
தெருக்கள் கூடத் தெரியாமல்

ஆங்காங்கே தமிழ் புத்தகங்கள் கூட
செத்து விட்டன
சிலர் வாய் தவறினால் - மட்டும்
வழிதவறி வரும்
தமிழ் வார்த்தை
ஈழ மண்ணும்
ஏழை மண்ணும்
மட்டும்தான் - உன்
தாய் வீடு

அங்கே

பேசுகின்ற வார்த்தைகளில்

மட்டும்தான் - நீ

உயிரோடு....

உயர்வோடு

நீ ஊட்டிய தாய்ப்பால்

என் பசிகளுக்கு

விருந்தாகலாம் ஆனாலும் என்

காயங்களுக்கு

மருந்தாகப் போவதில்லை

உலகம் அழிந்தாலும்

தமிழ் நீ இருந்தாக வேண்டும் - அன்றேல்

தமிழன் இறந்ததாக வேண்டும்

இணையத்தில் ஏறு

அமையத்தில் இரு

உன்னை உலகம் பேசும் - இல்லை இல்லை

உன்னால் உலகம் பேசும்

மீண்டும் மழலையாய்

மடிமீது தவழ வேண்டும்

மாசில்லாத

மழலைத்தமிழ்

மணங்கமழ வேண்டும்

குழந்தை தான்

கறந்த தாய் பாலுக்காவது

மறக்காமல் இருக்கும்.

ஆக்கம் க.தாருசன்

தரம் : 11

# நித்திரை

எம் ஆரோக்கிய வாழ்வுக்கு 'அடிநாதமாக' அமைவது நித்திரையாகும். ஆனால் எமது சமூகத்தில் பெருந்தொகையான மக்கள் போதியளவு நித்திரை செய்ய முடியாது. அவதிப்படுவதைக் காணமுடிகிறது. 'நாம் நன்றாக நித்திரை செய்கிறோம்' எனக் கூறுகிறவர்களுக்கும் 'ஓய்வு' (Rest) தேவை 7 – 8 மணித்தியாலம் நித்திரை செய்யும் மாணவனை ஓர் இருட்டறையில் விடின் 5 நிமிடங்களில் நித்திரையாவதைக் காணலாம் இந்நிலைமை நித்திரை போதாமையை உணர்த்துவதாக உள்ளது.

## 01. இயல்பான நித்திரை

ஒருவருக்கு 8 – 9 1/2 மணித்தியாலங்கள் இயல்பான நித்திரை அவசியமாகும். ஆனால் எமது சூழலில் எத்தனை வீதத்தினர் 9 மணித்தியாலம் வரை நித்திரை செய்கிறார்கள்.

## 02. நித்திரை இன்மைக்கான காரணிகள்

தற்போது இரவு பொழுது போக்கு நிகழ்ச்சிகள் கிராம மட்டத்திலும் கூடிக்கொண்டு போகின்றன. (தொலைக்காட்சி, வானொலி, நிகழ்வுகள்)

வேலைப்பளு, கூடிய வேலை செய்யும் நிர்ப்பந்தம்

சிநேகிதர்களின் கூடிய சேர்க்கை

நாள் வேலைகள 2 அல்லது 3 பகுதியாக பிரித்து 24 மணித்தியாலமும் மாறிமாறி வேலை செய்யும் அவலம். இதனால் சீராக நித்திரை கொள்ள முடியா நிலை. (Shift work)

24 மணித்தியாலமும் ஒலி ஒளி பரப்பாகும் கட்புல செவிப்புல சாதனங்களின் ஆதிக்கம் நித்திரை செய்யும் வாய்ப்புக் குறைவு.

## 03. இதன் தாக்கங்கள்

பூ ரணமாக நித்திரை செய்யும் நிலைமை கிடைத்தால் உற்பத்தித்திறன் கூடும். ஆக்கத்திறன் விருத்தியடையும். நாம் எடுக்கும் முயற்சிகளில் கூடியளவு கவனம் செலுத்த முடியும்.

வயது மூத்தோர் நோய் காரணமாகவும் பிள்ளைகள் வெளிநாடுகளில் பெற்றோர் தனிமைப் படுத்தப்பட்ட நிலைமை. மன உலைச்சல் காரணமாக நித்தரை சரிவரக் கொள்ள முடியாத அவலத்தை அனுபவிக்கின்றனர்.

நித்திரை சரிவரக் கிடைக்காவிடின் மக்களின் ஞாபகசக்தி குறைவடைய முடியும். தீர்மானம் எடுக்கும் திறன் குறைவடையும். கருத்தூன்ற முடியாது கற்றல் தடைப்படும். வேலைத்தளங்களின் கருமங்கள் சரியாக நிறைவேற்ற முடியாது. பிழைகள் அதிகரிக்கும்

உபகரணங்கள், இயந்திரங்கள் பாவிப்போர் அவற்றைச் சரிவரக் கண்காணிப்பதில் சிரமங்கொள்வர். அமெரிக்க ஆய்வு 10% வாகன விபத்துக்கள் ஓட்டுனர் வாகனத்தைச் செலுத்தும் வேளையில் நித்திரை அடைந்துள்ளமையை இனங்காட்டியுள்ளது.

அந்நாட்டில் 20% ஓட்டுனர் ஒரு நாளில் ஒரு தடைவையாவது வாகனம் ஓடும் போது நித்திரையாகியுள்ளனர்.

# Human Behavior can Affect Health

# மக்களின் நடத்தை ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்

01. ஈடு செய்யும் வழிமுறைகள்

சுராசரி 8 – 9 மணித்தியாலம் நித்திரை செய்தல் வேண்டும்.

வார இறுதியில் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை 1 – 1 ½ மணித்தியாலம் பிற்பகலில் நித்திரை செய்வதன் மூலம் இழந்த அமைதியற்ற நிலையைப் போக்க பேருதவியாக அமையும்.

தனிமையில் இருப்போர், குடும்பத்தைப் பிரிந்திருப்போர், பிள்ளைகள் வெளிநாடுகளில் இருப்போது, சித்திரவதைக்கு ஆளானோர், குண்டு வீச்சுக்கு இலக்கானோர், மரணங்களை நேரே கண்டு அதிர்ச்சிக்குள்ளானோர், இயற்கை அனர்த்தங்களில் அகப்பட்டோர் (சுனாமி) முதலானோர் நித்திரை செய்யும் வேளையில் மன அழுத்தம் காரணமாக நித்திரை குழப்பத்திற்கு ஆழாதல் தவிர்க்க முடியாததாகி விடுகின்றனர். மனஅமைதி பேணும் சமய அனுட்டானங்கள், ஆழச் சுவாசித்தல் மந்திர உச்சாடனம், ஜெபம் செய்தல் மூலம் மன ஆறுதல் அடைய முடியும்.

கீழ்க்காணும் முதலுதவி முறையை கடைப்பிடிக்கின்ற சில நிமிடங்களில் நித்திரையாகலாம்

## முதலுதவி

இரவு முழுவதும் நித்திரை இல்லையென யாரும் குறிப்பிடின் முதலுதவி மூலம் நித்திரையாக்கலாம் விபரம் வருமாறு:

சம தரையில் அல்லது பலகைக் கட்டிலில் தலை நிமிர்ந்து ஆறுதலாக கிடத்தல், தலையணை பாவிப்பதில்லை.

கண்ணை மூடியவாறு மூச்சுவிடுதல் உள்ளெடுத்தலை அவதானிக்கவும் (அமைதியாக).

மூச்சு வெளியில் விடும்போது வயிறு உள்நோக்கிச் செல்லும் மூச்செடுக்கும் போது வயிறு விரிவடையும் இந்நிலையில் உமது அடிவயிற்றில் கவனத்தை செலுத்தவும்.

நான் அமைதியாக சுவாசிக்கின்றேன். அமைதியாக உறங்குகின்றேன்.

நான் அமைதியடைகிறேன் இவ்விதம் சிந்தித்தவாறு உள்ளுணர்ந்தால் உமது அடிவயிற்றை அமைதியாக நோக்கவும். சில நிமிடங்களில் நித்திரையாகலாம்

**ஆக்கம் : சிவானந்தன் சிவகரன்**

9

**சான்று: கட்டுரைக் களஞ்சியம்**

# ஒரு மனிதனது ஆளுமை குடும்பம், பாடசாலை, சமூக நிறுவனங்கள் என்பவற்றினால் வளர்த்தெடுக்கப்படுகின்றன

ஒரு மனிதனானவன் தான் பிறந்து வளர்கின்ற இடங்களின் மூலம் பற்பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றான். அந்த வகையில் அச்சூழல் அவனை வழிநடத்திச் செல்கின்றது. அதாவது முதற்கட்டமாக அவன் பிறந்தவுடன் அவனது குடும்பம் அவனது ஆளுமை திறன்களை வளர்க்கின்றது. எவ்வாறு எனின் அவனது வீட்டில் வாழும் குடும்ப அங்கத்தவர்கள் அவர்களுக்கு இடையில் அன்புகாட்டுதல் சகோதரத்துவம், மற்றவர்களை மதித்தல், பிறர் கருத்துக்களை மதித்தல், மற்றும் உறுப்பினர்களுக்கிடையிலான புரிந்துணர்வு என்பவற்றை ஊட்டுகின்றது. எனவே ஒரு மனிதன் அவனது குடும்பச்சூழலின் நிமித்தமே அவன் சமூகத்தில் நல்ல ஒரு மதிப்பு மிக்க ஒருவனாக மாறிக்கொள்ள முடியும். எனவே முதற்கட்டமாக குடும்பப் பின்னனி அவனது ஆளுமை விருத்தியை குடும்பம் வளர்க்கின்றது. அடுத்த கட்டமாக அவன் பாடசாலைக்குச் செல்கின்றான்.

இதன் மூலம் அவன் தன்னிடம் காணப்படும் ஏனைய ஆளுமைத் திறன்களை வளர்த்துக் கொள்கின்றான். அதாவது குடும்பச் சூழலுக்கு அடுத்த படியாக பாடசாலைச் சூழலே அவனை நல்வழிப்படுத்துகின்றது. எவ்வாறெனின் அவனது கற்றல் செயற்பாடுகளை விருத்தி செய்வதன் மூலம் அவனது அறிவை வளர்த்து அவனை அந்த நாட்டுக்கு ஒரு பெறுமதி மிக்க பயனுறுதி யுடைய ஒரு நற்பிரஜையாகக் கொண்டு செல்கின்றது.

அடுத்த கட்டமாக அவனது தனிப்பட்ட ஆளுமை விருத்திச் செயற்பாடுகளாவன இசை நிகழ்ச்சிகளில் பாடுதல், ஆடுதல், பேச்சு, கவிதை மற்றும் இசைக்கருவிகளை இசைத்தல் போன்ற வெளிக்கள செயற்பாடுகளை அவனிடையே வளர்ப்பதற்கு பாடசாலை ஒரு நல்ல அடித்தளமாக காணப்படுகின்றது. அது மட்டுமன்றி அவனுள்ளே காணப்படும் விளையாட்டுச் செயற்பாடுகளா னவை மற்றும் அவற்றில் தலைமை தாங்குவதற்குத் தேவையான தலைமைத்துவப் பண்பு என்பவற்றையும் மற்றும் அவர்களிடையே காணப்படும் பலவீனங்களான வெட்கம், பயம், மேடைக் கூச்சம், போன்றவற்றையும் பாடசாலை மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றது. எனவே ஒரு மனிதனது ஆளுமைத் திறனை மென்மேலும் மெருகூட்டுவதற்கு பாடசாலை ஓர் பயனுறுதி உடைய நிறுவ னமாகத் தொழிற்படுகின்றது. எனவே குடும்பத்திற்கு அடுத்த படியாக முக்கியத்துவம் வாய்ந்தது பாடசாலை ஆகும். இந்தப் பாடசாலையில் பற்பல கழகங்கள் இயங்குவதனால் அதன் மூலம் மற்றவர்களை மதித்தல், பெரியவர்களுக்கு கனம் பண்ணுதல், மற்றும் அவர்கள் சொற்கேட்டு நடத்தல், மற்றும் சேவை மனப்பாங்கு, தலைமைத்துவப் பண்பு போன்றன வளர்க்கப்பட்டு வருகின்றது.

அது மட்டுமல்லாது பாடசாலையில் இடம் பெறும் காலைப் பிரார்த்தனை மூலம் ஒற்றுமையாகச் செயற்படும் மனப்பாங்கு வளர்கின்றது. எனவே பாடசாலை ஒரு சிறந்த நிறுவனமாகும். இவற்றிற்கு அடுத்த படியான நிறுவனமாக சமூக நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. அதாவது நாம்

குடும்பம், பாடசாலை போன்றவற்றிலிருந்து கற்றுக்கொண்ட ஆளுமைத் திறன்களை வெளிக்காட்டுவதற்கும் மற்றும் வேறு பல சிறப்பான ஆளுமைத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும். அதாவது சமூக நிறுவனங்கள் மூலம் மக்களுக்கு சேவை செய்யும் பாங்கை இங்கு மென்மேலும் வளர்த்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது. அது மட்டுமன்றி இங்கு நாம் கடமை உணர்வு மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகம் செய்தல் போன்ற மனிதனது ஆளுமையை விருத்தி செய்யும் ஓர் இடமாகவும் அதுமட்டும் அல்லாது ஆளுமை திறனை வெளிக்காட்டுவதற்கான ஓர் இடமாகவும் பயன்படுகின்றது. எனவே இவற்றின் மூலம் மனிதனது ஆளுமைத் திறனை வளர்த்துக் கொள்ள முடிகின்றது. அது மட்டுமல்லாது இந்த நிறுவனங்கள் மனிதனது வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த ஓர் அங்கங்களாகக் காணப்படுகின்றது. எனவே இவ்வாறான சூழல்கள் ஓர் நன்நடத்தையுடனாகக் காணப்பட்டாலே மாத்திரம் அவற்றில் அங்கம் வகிக்கின்றவர்களும் நாட்டிலே எல்லோராலும் போற்றி மதித்து வாழப்படுபவர்களாகவும். நாட்டுக்கு நன்மை பயக்கும் ஓர் பயனுறுதியுடைய நற்பிரஜையாக வர முடியும்.

## மனிதா விழித்திடு

கால ஓட்டத்திற்கு முரனாக உறங்குபவனே

தூங்கியது போதும் மனிதா விழித்திடு

எவ்வளவு காலம் தான் உறங்கிக் கொண்டிருப்பாய்

நீயும் ஓடுபவனுடன் சேர்ந்து ஓடடா

வாழ்க்கை ஒரு ஓட்டப் பந்தயம்

அதில் நீயும் ஓடி வெல்லடா

சாவினைக் கண்டு அஞ்சிடாது துணிந்து நில்லடா

நீயும் இந்த மண்ணில் ஒரு வீரன் என காட்டடா

பூ மி ஒரு போர்க்களம் அதில் - நீ

ஒரு போர் வீரன் கனம் தனை வெல்லடா.

**ஆக்கம் : கு.கபிலன்**

**தரம் : 11**

# தாய் மொழியின் தனிச் சிறப்பு

மனித வரலாற்றுடன் தொடர்புடையதாக விளங்கும் மொழியானது மனித இனம் தோன்றிய காலம் தொட்டே பயின்று வரப்படுகின்றது. மனிதர்களிடையே தொடர்பையும் உறவையும் ஏற்படுத்தும் சாதனமாக மொழி விளங்குகின்றது. ஆரம்பத்தில் பேச்சு மொழியாக இருந்த நம் தாய் மொழி பின்பு வரி வடிவத்தைப் பெற்று வளர்ச்சி கண்டது. எழுத்தையும் ஒலியையும் கொண்டு மனிதனால் வளர்க்கப்பட்டதே மொழியாகும். இது மனித வாழ்வோடு இணைந்தது எனவே தான் இம் மொழி மூலம் நமது கலாசாரம் பண்பாடு என்பன வளர்வதால் அம்மொழியின் சிறப்பை அறிந்திருப்பது எமது கடமையாகும்.இவ்வகையிலே நான் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியும், சமூக இயக்கத்திற்கும் அறிவு விருத்திக்கும் பண்பாட்டுப் பயிற்சிக்கும் அடிப்படையாக அமைகின்றது.

இன்று உலகின் தொன்மையான மொழிகள் என்று பேசப்படும் மொழிகளில் ஒன்றாக நம் தாய் மொழி விளங்கி வருவது எமக்கு பெருமைதரும். அத்துடன் பல்வேறு அறிஞர், கவிஞர், புலவர் என பல்துறைசார் மேதைகளையும் தந்த சிறப்பு எமது மொழிக்குரியது. இவர்கள் கருத்தூடாக நோக்கும் போது விழுமியத்தை வளர்க்கவும், அறிவை விருத்தி செய்யவும், உடல், உள சமூக மயத்திற்கு உதவவும், வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தை தருவதற்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் ஆளுமையை வளர்க்கவும், தாயின் அரவணைப்பில் நாம் கற்றுக் கொண்ட தாய் மொழி உதவுகிறது. ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் தாய் மொழியானது தொடர்புடையது என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். தாய்மொழி இன்றிய செயற்பாடு யாவும் அன்னிய மொழிகளாகும். எமது இன்பதுன்ப உணர்வை வெளிப்படுத்த உதவுவது எமது தாய் மொழி ஆகும். எனவேதான் கல்வி உள்ளத்தை ஊனமாக்கும் என குறிப்பிட்டுள்ளனர். இதனாலேதான் நோபல் பரிசு பெற்ற இரவீந்திரநாத்தாகூர் என்ற அறிஞரும் ஒரு குழந்தைக்கு தாய்ப்பால் எவ்வ ளவு முக்கியமோ அதேயளவு தாய் மொழியும் அவசியம் என்றார்.

மனித உரிமைப் பிரகடனத்திலும் ஐ.நா சபையானது ஒவ்வொரு குழந்தையினதும் பிறப்புரிமை கல்வி என்றும் அதுவும் தாய்மொழி மூலமே போதிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. ஆயினும் இன்று அன்னிய மொழி மோகம் எம்மை ஆட்கொள்ளுகிறது.ஆனால் எத்தனையோ அன்னியர்கள் எம் தமிழ்த்தாய் மொழியை வளர்த்துள்ளதை நாம் நோக்காமலில்லை. ஜீயு.போப். தெநொபிலி. கால்டுவெல் ரேனியா வீரமா முனிவர் என்பவர் திருவாசகத்தையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். Dr.வின்ஸ்லோ என்பவர் தமிழ் ஆங்கில அகராதியை எழுதினார். கால்டுவெல் என்பவரே தொல்காப்பியம் முதல் திருக்குறள் வரை பிற மொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளனர்.

திருக்குறளிலே பைபிளைக் கண்டேன் என கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் குறிப்பிட்டு உள்ளதும். மூன்றாம் உலகப் போரை நீக்க வல்லது குறளே என ஜேர்மன் அறிஞர் குறிப்பிடுவதும் தாய் மொழிக்கு சூட்டப்பட்ட ஆரங்களே. எனவே உலகில் எங்கெங்கும் வாழினும் எமது தாய் மொழி யாம் செந்தமிழ் மொழியை பேணிப் பாதுகாத்து தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்பதற்கமைய வாழ்வது நம் தலையாய கடமையே ஆகும்.

**ஆக்கம் : பி. ஹரிராஜ்**

A/L 2014

# Some physics vocabulary

Velocity ($\vec{v}$): How fast *and in what direction* something is moving.

Momentum ($\vec{p}$): The magnitude of an object's momentum gives an indication of how hard it is to bring it to a stop.

momentum = mass x velocity ($\vec{p} = m\vec{v}$)

(Heavy but slow, light but fast... both are hard to stop.)

Force ($\vec{F}$): Just like you'd think. It's a push, characterized by a magnitude (how hard) and a direction.

---

Force changes momentum:

- The harder you push, the more rapidly the momentum changes.
- The longer you push, the greater the total change in momentum.
- The equation: $\Delta\vec{p} = \vec{F}\Delta t$.

If you don't push on something, its speed doesn't change. Greater momentum -> harder to stop.

If you don't push on something its direction of travel doesn't change. Note that $\vec{v}$ and $\vec{p}$ point in the same direction.

If you do push on something, you can change its speed and/or its direction of travel.

(back to contents)

---

# Net force: adding forces


Cart on air track feels two forces:

- gravity
- up & slightly to-the-left push from air track (there's no frictional force parallel to the air track)

(Large rotational inertia, but spinning slowly; small rotational inertia but spinning rapidly... both are hard to stop.)

---


Centrifugal force: Effective force pushing something to the outside of a turn.




doubling ω quadruples the centrifugal force
doubling the turn's radius doubles the force

---

Torque ($\vec{\tau}$): "Off center" force(s) which can cause something to spin.





---

Torque changes angular momentum:

- The harder you push, the more quickly the object "spins up."
- The further from the spin axis you apply the forces used to generate the torque, the more quickly the object "spins up."
- The longer you push, the greater the total change in angular momentum.
- The equation: $\Delta\vec{L} = \vec{\tau}\Delta t$

If no torque is applied to a rigid object, it spins at a constant rate. Greater angular momentum -> harder to stop.




Keith Roberts (ABT) in *The Rite of Spring*, photo by Roy Round

Forces sum to zero.

Both forces "point through" the dancer's center of gravity, so torque is zero.

---

More complicated example:



Sandra Brown and Johann Renvall (ABT) in *Airs*, photo by Nancy Ellison

Forces on each dancer sum to zero.


Though some forces are "off-center", the torques also sum to zero.

Obviously, the net torque (and force) won't be zero if only one dancer is present:

# Balance while turning


Two distinct "physics domains" here:


- slow turns: maintain static balance
- fast turns: rotation axis shouldn't wobble (much)



Not all positions which are statically balanced can be held in a turn.

An example:




ஆக்கம் : S.தர்சன்

A/L 2013

# ஒலிம்பிக் விளையாட்டின் வரலாறு

நவீன ஒலிம்பிக் விழாவானது 1896 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் புராதன ஒலிம்பிக் விழாவானது கி.மு 776ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வந்துள்ளது. பிறிதொரு பதிவேட்டில் இதன் ஆரம்பம் கி.மு 1300 என்று இருந்தாலும் இதன் முதல் ஆரம்பம் கி.மு 771 என்பதற்கான சான்றுகள் உள்ளன.

புராதன கிறிஸ் நாட்டின் 'எல்பியஸ்' என்ற ஆற்றங்கரையில் அமைந்திருந்த ஒலிம்பியல் என்ற ஊரில் இவ்விழா முதன்முதல் ஆரம்பித்தபடியால் இவ்விழா பின்னர் 'ஒலிம்பிக்ஸ்' என்ற பெயரிலேயே அழைக்கப்படலானது. ஆரம்பத்தில் கிரேக்கத் தெய்வங்களை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கத்திலேயே இவ்விழா நடத்தப்பட்டது. ஒலிம்பியஸ் ஊரில் அமைந்திருந்த தெய்வமான 'ஸியுஸ் என்ற தேவதையை பூ ஜிக்கும் ஒரு வைபவமாக இது இருந்தது.

வருடம் பூ ராவும் நிகழ்த்தப்பட்ட இவ்விழாவில் முழு நாடும் கலந்து கொண்டதுடன் ஓர் உயர் தேசிய விழாவாகவும், மத வைபவமாகவும் அமைந்தது. பிற்காலத்தில் இவ்விழாவானது நாட்டின் ஒற்றுமை, சமாதானம் என்பவற்றுக்கான அடையாளமாகத் திகழ்ந்தது. ஏதோ காரணத்தின் நிமித்தம் நாட்டில் ஒலிம்பிக் விழாக்காலத்தில் யுத்த நிறுத்தம் நிலைமை தோன்றியிருக்குமாயின் இவ்விழா முடிவுறும் வகையில் யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கும் வழக்கத்தினை யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்பினரும் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடித்தனர்.

ஒலிம்பிக்விழா ஆரம்பிக்கப்படும் பல தினங்களுக்கு முன்னதாகவே இவ்விழாவின் ஆரம்பத்தினை அறிவிக்கும் செய்தியுடன் 'ஒலிம்பியஸ்' நகரில் காணப்பட்ட 'வியுஸ்' ஆலயத்திலிருந்து வீரர்கள் நாடெங்கும் அனுப்பப்பட்டனர். இவ்வித வைபவம் ஐந்து நாட்களுக்கு இடம்பெற்றது. முதலாவது நாளைத் தெய்வத்துக்குச் செய்யப்படும் பலி பூ ஜைக்கு ஒதுக்கினர்.



அதன்பின்னர் விழா நடைபெறும் இடத்திற்கு நாடெங்கு மிருந்து வந்து சேர்வோர் அப்பிரதேசத்தில் கூடாரங்கள் அமைத்து தங்கத் தொடங்குவர். அங்கு வரும் மக்களின் பல்வேறு தேவைகளுக்காகவும், மற்றும் வியாபாரிகள் தம் பண்டங்களை விற்பதற்காகவும் அங்காடிகள் அமைப்பர்.

கி.மு 776ம் ஆண்டு நடத்தப்பட்ட விழாவில் 200 மீற்றர் ஓட்டப்போட்டி மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தது. அத்துடன் கி.மு 720ஆம் ஆண்டு வரை இப்போட்டியில் கலந்து கொண்டவர்கள் ஆடை எதுவுமின்றி நிர்வாண மாகவே ஓட அனுமதிக்கப்பட்டதால் இக்காலத்தில் இப்போட்டியை பார்ப்பதற்கு பெண்கள் அனுமதிக்கப்பட

வில்லை. ஆனால் பின்னர் ஆடை அணிந்து கலந்து கொள்ளலாமென விதிமுறை ஏற்படுத்தப் பட்டது.

விளையாட்டில் வெற்றி பெற்ற வீரனுக்கு ஒலிவ் கிரீடம் சூட்டி கௌரவிக்கப்பட்டது. இவ்விழா ஆரம்பிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டு காலம் வரை நிகழ்வுகள் தொடர்பிலான பதிவுகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் பிற்பட்ட காலத்தில் 'ஹிமியாஸ்' என்ற தத்துவஞானி சகல நிகழ்வுகளையும் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டார். ஆரிஸ்டோட்டில் காலத்தில் அவரே இப்பணியை ஏற்று செய்து வந்தார்.

கி.பி 160-170 காலத்தில் 'பொஸதியஸ்' என்ற வரலாற்று ஆசிரியர் ஒலிம்பிக் விளையாட்டு விழா தொடர்பில் நூல் ஒன்றை இயற்றியுள்ளார். இந்நூலின் பிரகாரம் 'லஜயோனிடாஸ்' என்ற ஒலிம்பிக் வீரர் ஒருவர் 12 போட்டிகளில் வெற்றிபெற்று சாதனை படைத்த வீரனாக 'மிலான்' என்ற மல்யுத்த வீரனும் திகழ்ந்துள்ளான்.

அன்றைய ஒலிம்பிக் விழாக்களில் அனைவரையும் கலந்த நிகழ்ச்சியாக இருந்தது 'பென்கிரேஷன்' என்ற விளையாட்டாகும். இது இன்றைய குத்துச் சண்டை, மல்யுத்தம், கராட்டி முதலானவற்றை கலந்து விளையாடும் விளையாட்டாக இருந்தது. இவ்விளையாட்டில் வீரர்கள் ஒருவரை ஒருவர் அடித்து, உதைத்து, வதைத்து வாட்டிக்கொள்வர். இதன் காரணமாக இந்நிகழ்ச்சியைக் கண்டு ரசிக்கப் பெருங்கூட்டம் முண்டியடித்தது. பல சந்தர்ப்பங்களில் இப்போட்டிகள் மரணத்திலேயே முடிவுற்றன.

**ஆக்கம் : பி.சஜீவன்**
**தரம் : 11**



# முடியும் முரண்படு

புதுயுகம் செய்ய
புதுமைதான் ஒன்றெனின்
அரசியல்தான் தடையெனின்
தலைகளை எடுப்போம்
தலைவர்களிடமிருந்து
நண்பா
முடியும் முரண்படு...


மனிதர் ஒன்றுபட
மனிதம் இல்லாத
மதம் தான்
ஒன்றென்றால்
மதம் ஒன்றில்லா
உலகொன்று செய்வோம்
நண்பா
முடியும் முரண்படு...

கடமைகள் மறந்த
கண்ணியம் இழந்த
கற்பு இன்றி
ஒழுக்கம் கெட்ட
மறு உள்ள
மனிதர்களை
களை எடு
நண்பா
முடியும் முரண்படு...

கயவர்கள் ஒழிந்திட
கள்வர்கள் அழிந்திட
சாதிகள் சரிந்திட
மதங்கள் மறைந்திட
முடியும்
ஆயுதத்தால் என்றால்
துணிந்து
ஏந்திடு
நண்பா
முடியும் முரண்படு...

ஒளி மறந்திட
இருள்தான் இடர் என்றால்
இனியும் தயக்கமேன்
அசையாது
நிறுத்திவை
சூரியனை
நண்பா
முடியும் முரண்படு...

ஆக்கம் : கு.கபிலன்
தரம் : 11



# பூணூலும் மீன் பிடிக்கும்

சாதி சாதியென்று சண்டையிட்டு சாகும் வரை
சோம்பேறி சோடைகளாய்
சோரம் போகும் சகோதரரே
மனித மாண்பில் மனிதமும் எமக்கில்லை
எங்கு எப்படித்தான்
மனிதம் மழுங்கியாச்சோ?

நிலவு கரை கண்டு கதிரவது தொழுங்கலில்
உலவும் உடுவணைத்தும் சாதி சொல்லிச் சாகலில்
தென்றல் தெருவில் வரும்போது போக மறுக்கவில்லை
மாடு காடலையும் கந்தனது வீடு செல்ல
சாமி சாதியென்று சங்கமிக்கத் தயங்கயிலே
குயில் கூவுமொழி சாதி கண்டு இனிப்பதில்
இனி சாதி சாதி யென்று சண்டையிடத் தேவையில்லை

மாது மினுலையும் மண்ணிருக்கு முயிரலையும்
வானில் வட்டமிடும் வல்லுருவப் பறவையிலும்
கோயில் குடியிருக்கும் கடவுளிலும் கலைகளிலும்
பாயில் பிணைந்திருக்கும் ஓலையிலும் ஒடிசலிலும்
ஒரு போதும் சாதியில்லை

தரம் சொல்லித் தகுதி சொல்லி
தூரமாக எமையொதுக்கி
ஓரமாக வைத்த சில
ஒரு போது மில்லாம எப்போது
இங்கு வரும்
புது உலகம் அது கண்டு
பூணூலும் மீன் பிடிக்கும்
வேட்டியும் வேல் பிடிக்கும்



ஆக்கம் : ச.பபிகரன்
A/l (2013)

# சமூக நிலை

பிள்ளையை அரவணைத்து வளர்ப்பவள் அன்னை
அவனை நல்ல ஆளாக்க விரும்பும் தந்தை
இவையெல்லாம் கனவாக நிலைத்து நிற்க
அதை கலைப்பதற்கென்று இராப்பகலாய் காத்திடுவர்.

மனிதனைப் படைத்தது வெறும் மனிதனாக
அதில் உணர்வுகள் மட்டும் சிறப்பாக
கோபங்கள் பொறாமைகள் அழுக்காக
இந்த மனிதர் நெஞ்சில் படிந்தது தாழ்வாக



பிள்ளை மனதில் வஞ்சகம் இல்லை
அதை மனதில் படைத்துவிடும் சமூகத்தின் தொல்லை
ஒருவன் பிழை செய்தால் அதை திருத்துவதுதான் முறை
மாறாக அவனை அவதூறு செய்வது தான் நம்மக்களின் குறை

ஒருவன் படும் துன்பத்தில் ஒருவரும் பங்கெடுக்கார்
நல்லது செய்வதற்கு நாலு பேர் கூட துணை நிற்கார்
திருட்டுப்பல செய்து மற்றவரை துன்பத்தில் ஆழ்த்திடுவார்
இதை எடுத்துரைக்க செல்பரையும் தம்மைப்போல் மாற்றிடுவர்

கடலில் விழுந்து முத்தெடுக்க வேண்டியவர்கள் எல்லாம்
காதலில் விழுந்து தத்தளிக்கின்றார்கள்
நீரை அருந்தி வாழ வேண்டும்
ஆனால் நம்மக்கள் மதுவை அருந்தி வாழ்கிறார்

இது தானா நம் மக்களின் நிலை
இதை கலைத்தெறிய வந்தவர்களும் தற்போது இல்லை
நம்மை நாம் திருத்தும் வரை
நாம் அடிமையாகத்தான் இருப்போம் என்பது என் உரை

**ஆக்கம் : வ.சிவகரன்**

**தரம் : 9**

# உடற்பயிற்சிக்கு ஓய்வளிக்கலாமா?

நோயற்ற வாழ்வு என்னும் குறைவற்ற செல்வத்தைப் பெறுவது இப்போது மிகவும் அரிதாகி விட்டது. சத்தில்லா உணவு, சுகாதாரமற்ற வாழ்விடம் எனப் பல்வேறு காரணங்களுக்கிடையே ஆரோக்கியமற்ற வாழ்வுக்கு உடற்பயிற்சிப் புறக்கணிப்பும் முக்கிய காரணம்.

வாழ்நாள் முழுவதும் மருத்துவரிடம் செல்லாமல் இருக்க ஒரு மருந்து சொல்லுங்கள்" என்றால் உடனே உடற்பயிற்சி என்று சொல்லி விடலாம். ஆனால் கண்கெட்ட பின்பு சூரியநமஸ்காரம் என்பதைப் போல நோய்களின் ஆதிக்கம் உடலில் அரங்கேறிய பின்புதான் கசக்கும் மருந்துகளுடன் வியர்க்கும் உடற்பயிற்சியின் பக்கம் தங்கள் பார்வையைத் திருப்புகிறார்கள் பலர்.


சில பத்தாண்டு முன்பு வரை உடற்பயிற்சிக்காகத் தனியாக நேரம் ஒதுக்க வேண்டியதில்லை. ஏனென்றால், எந்திரங்களின் பயன்பாடு குறைந்திருந்த அந்தக் காலத்தில் உழைப்பே பிரதானம். உணவுக்காக உழைக்கும் போதே உடற்பயிற்சியும் கிடைக்கப்பெற்று ஆரோக்கியம் பெருகியது.

ஆறுகளின் தேன்சுவை நீருக்கும், தென்றல் உறவாடும் காற்றுக்கும் இப்போதைய நகரங்களில் கூட அன்று தட்டுப்பாடில்லை நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தாமல் எந்த வேலையையும் முடிக்க முடியாது என்பதால் உடலும் அதற்கேற்ப வளைக்கப்பட்டது.

இதனுடன் "வீரம்" என்னும் போதையூ ட்டி இளைஞர்களுக்கு சிலம்பம், வாள்வீச்சு போன்ற வழிகளிலும் உடல் மேலும் வலுவூ ட்டப்பட்டது. சில பகுதிகளில் பல கிலோ எடை கொண்ட "திருமண கல்" என்ற கல்லை தூக்கிப் போட்டால் மட்டுமே பெண் கொடுக்கும் வழக்கம் கூட இருந்தது.

காலத்தின் வேகத்தில் அறிவியல் கடவுளின் வரத்தால் ஏராளமான இயந்திரங்கள் பெருகிவிட்டன. இன்று படுக்கையில் இருந்தபடியே வீட்டுக்குக் கதவுகளை "ரிமோட் கன்ட்ரோல்" மூலம் திறந்து மூடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், உடற்பயிற்சிக்கு வெகுதூரத்துக்குச் சென்றுவிட்டது. கணினியோடு உறவாடி உழைக்கும் இன்றைய பல இளைஞர்களின் கைகள் கூட மகளிரைப் போல மென்மையாகி விட்டது என்பதே உண்மை.

கருப்பட்டியையும், கும்பஞ்சோற்றையும் அருங்காட்சியகத்தில் இருக்கும் உணவுப் பொருளாகப் புறந்தள்ளிவிட்டு, துரித உணவுகளால் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் இளைஞர்களை உடல் பருமனும், நோய்களும் எட்டிப்பிடிப்பது எளிதாகி வருகிறது. ராணுவம், போலீஸ் போன்ற பணிகளுக்குச் சென்றால் மட்டுமே கட்டான உடல்வாகு தேவை என்பதும், படிப்பு, பணிகளுக்காக உடற்பயிற்சியை மறப்பதும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது.



பொலிவான முகத் தோற்றத்துக்கான பலவித க்ரீம்களை வாங்க பணத்தில் தாராளம் காட்டும் வேளையில், உடலை மிடுக்காக்கி ஆரோக்கியத் தைப் பரிசளிக்கும் உடற்பயிற்சிகளுக்காகச் செலவிட மட்டும் தயக்கம் காட்டுவது தவறானதாகும்.

இளைஞர்கள் உடற்பயிற்சிக்கு ஓய்வளிக்கும் போக்கு உகந்ததல்ல. உடற்பயிற்சியின் உன்ன தத்தை சிறுவயது வகுப்புகளிலேயே அறிந்தி ருந்தும் காத்துக்கிடக்கும் நிலை ஏற்பட் டுள்ளது.

தொடக்கப் பள்ளிகள் முதல் மேல்நிலைக் கல்வி வரை வாரத்தில் ஒருசில மணி நேரம் மட்டுமே விளையாட்டுப் பாடவேளையாக உள்ளது. இந் நேரத்திலும் சில ஆசிரியர்கள் தமது பாடத்தைப் படிக்க ரகசிய உத்தரவுகளைப் பிறப்பிப்பதும் உண்டு.

அனைத்து மாணவர்களும் ஏதேனும் ஒரு விளையாட்டு அணியில் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று வற்புறுத்தல் இல்லை. இதனால் விளையாட்டுப் பாடவேளையை வெட்டிக்கதை நேரமாக மைதானத்தில் மண்ணில் கோலமிட்டு இருக்கும் மாணவர்கள் ஏராளம்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பர். அந்தப் பழமொழிக்கு ஏற்ப பள்ளிப் பருவத்திலேயே விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

பள்ளி மாணவர்களுக்குத் தினந்தோறும் மாலை இறுதி பாடவேளையை விளையாட்டுக்காக ஒதுக்க வேண்டும். இந்த நேரத்தில் சிலம்பம், அந்நிய நாட்டு வரவான கராத்தே உள்பட உடற் பயிற்சியோடு தொடர்புடைய வீர விளையாட்டுக்களைச் சேர்ப்பது தவறில்லை.

அரசுப் பணிகளில் சேருவதற்கு விளையாட்டுச் சான்றிதழ்களின் அவசியத்தை அதிகப்படுத்த வேண்டும். ஊடற்பயிற்சி குறித்த விழிப்புணர்வு ஏற்பட சுகாதாரத் துறையினர் புதிய யுக்திகளை சிந்தித்து செயல்படுத்த வேண்டும். எமது அரசு இளைஞர்களிடம் உடற்பயிற்சி மோகத்தைத் தூண்ட அனைத்து ஊர்களிலும் பல்வேறு வசதிகள் கொண்ட நவீன உடற்பயிற்சி கூடங்களை குறைந்த கட்டணத்தில் திறக்க புதிய திட்டத்தை உருவாக்குவது அவசியம்.வருங்கால நம் இளைஞர்கள் வலுவானவர்களாக மாறினால்தான் நாட்டின் ஏற்றம் எளிதாகும் என்பது ஆட்சியாளர்களுக்கு தெரியாததல்ல.


**ஆக்கம் : ச.கஜந்தன்**

**தரம் 11**

# இரு முத்துகள்

'யோகாப்பயிற்சி இன்று உலகில் ஆடம்பரமான ஒன்று ஆனால் அதன் உண்மைத் தன்மையை உணராதோர் பலர். அமைதி. சாந்தம். போன்ற உயரிய எண்ணங்களை இது வளர்க்கின்றது. இன்றைய நூற்றாண்டில் நாடுகளிற்கு இடையான யோகப் பயிற்சி அவசியமாகின்றது….' அரசியல் கருத்தரங்கொன்றில் ரஸ்யா விஞ்ஞான மேதையின் கருத்தாகும் இக்கருத்து இன்றைய உலகில் பலரிடம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாக மாறிவிட்டது. ஆயினும் ஒரு தசாப்த காலமாக இதன் உச்சக்கட்டம் விளங்குகின்றது. இரண்டு நபர்கள் இதில் விளங்கி வந்தனர் தமது நிலையாண்மையைப் பேண ஒருவர் வென்றார் மறுவர் இறந்தார்

அவர்கள் யார்…..?



ஒருவர் ஒசாமா மற்றயவர் ஒபாமா. இவர்களிடையே காணப் பட்ட ஒற்றுமை வேற்றுமைகளை அலசி ஆராய்வதே இக்கட்டுரை யின் நோக்கம் மேற்கூறிய இருவ ரும் USA உடன் தொடர்பு பட்ட வர்கள். எனினும் பூர்வீக ரீதியில் அன்று ஒபாமாவின் பூர்வீக நாடு கென்யா. ஒசாமாவின் பூ ர்வீக நாடு சவுதி அரேபியா. ஒரு கண்ட நாடுகள் இருண்ட கண்டத்தில் துயின்ற தலைவர்கள் எனக்கும் இல்லை உனக்குமில்லை தன் சமூ கத்திற்கு வாழ்ந்த கதாநாயகர்கள்.

யார் இந்த ஒசாமா பின்லேடன் என்றால் உலகம் அறிந்த தீவிரவாதி. ஆம் தீவிரமான வாதி. இஸ்லாமிய நாடுகளில் USA பரம்பலை எதிர்த்தவர். சவுதிஅரேபியாவில் பிறந்தாலும் CIAன் உளவாளி CIA ஆல் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட ஒரு நாயகன். 11.09.2011ல் USAன் இரட்டை கோபுரம் பென்டகன்தாக்குதலின் முக்கிய புள்ளி சிறுவயதிலேயே பெற்றோர்களினால் துன்பப்பட்டவர். ஆனால் 'அல்கெய்தா தீவிர வாத இயக்கத்தின் தலைவர் போராடிய போராளி இன்று…….

USA ஆல் அனுப்பப்பட்ட SEAL படைப்பிரிவால் (USA Navy Special Squared – Sea, Air, Land) கொலை செய்யப்பட்டு இந்து ஆழியில் துயில்கின்றார்.

ஒபாமா. பராக் ஒபாமா. பராக் ஹீசைன் ஒபாமா உலகம் அறிந்த தலைவர் USA ன் ஒரே ஒரு கறுப்பின ஜனாதிபதி ஆயினும் இவரின் வரலாறும் சுவையான ஒன்றே. ஒபாமாவின் தந்தை கென்யாவைச் சார்ந்தவர். தாய் USA யைச் சார்ந்தவர் இரு பிள்ளைகளின் தந்தையான ஒபாமாவின்

தந்தை கல்வியின் பொருட்டு ஹவாய் தேசிய பல்கலை கழகத்திற்கு வந்தபோது ஒபாமாவின் தாயின் மீது காதலுற்று மணம் செய்தவர். 1964ல் இருவரும் விவாகரத்து செய்ய ஒபாமாவின் தாய் தனது பால்ய நண்பனான லோலோ சுதோரேவை திருமணம் செய்தார். ஆயினும் 1980ல் இருவரும் அதிகார பூ ர்வமாக விவாகரத்து செய்தனர். ஆயினும் ஒபாமாவின் தாயின் தாய், தந்தை (பாட்டன், பாட்டி) ஒபாமாவை வளர்த்தனர். கறுப்பினர்களின் சிகரம், பேச்சாற்றலும் எழுத்தறிவும் நிறைந்த நாயகன். இவ்வாறான ஒபாமா இன்று வெள்ளை மாளிகையில் வாழ்கின்றார்.

இவ்வாறு இரு வேறுபட்ட நபர்கள் வாழ்ந்தாலும் இவர்களில் ஒரு ஒற்றுமை தமது மதத்திற்காக வாழ்ந்தவர்கள்.இஸ்லாமிய போராளியான ஒசாமா தனது மதத்திற்கு வாழ்ந்தார். ஒபாமா தனது இனத்திற்கு வாழ்ந்தார். சிறந்த தூரநோக்கு சிந்தனை, புரட்சிகரமான எண்ணங்கள் இருவரிடமும் உள்ளது. ஒசாமா ஆயுதம் தாங்க ஒபாமா அரசியலை அணிந்தார். இருவரினது பொதுவான இவ் ஒற்றுமை உலகு அறிந்த ஒன்று

2001.09.11 ல் அரசியல் ரீதியால் சந்தித்த இவர்கள் இன்று பிரிந்து விட்டனர். உலக சமாதானம் எனும் போர்வையில் அமெரிக்க அரசு ஒசாமாவை கொலை செய்தது. ஆயினும் ஒசாமா முதலானோரால் காட்டப்பட்ட பாதை இன்றுபலரால் முன்னெடுக்கப்படுகிறது. துன் மொழிக்கு இனத்திற்குஆயுதம் ஏந்தல்.


அதேபோல ஒபாமாவினால் காட்டப்பட்ட பாதை பையப்பைய பின்பற்றப்பட்டது. USA ல் 2ம் தர பிரதிநிதியான அவர் ஜனாதிபதியானார் உலகமே வியக்கவைத்த ஒரு விடயம். இவ்வாறு தனது இனத்திற்கு ஜனாதிபதியான ஒபாமா நிலைத்திருக்க எனது ஆன்மாவினால் வாழ்த்துகின்றேன்.

சுவாரசியமான இவர்களிருவரிற்குமிடையேயான இப்போர் முடிந்தது ஆனால் பாதை முடியவில்லை.

தமது இனம், மதத்திற்கு வாழ்ந்த இருவருமே மகான்கள்
இவர்கள் என்றும் எண்ணப்படவேண்டிய இரு முத்துக்கள்
நன்றி

பிருதிவிராஜ் ஹிராஜ்
A/L 2014

சான்று : Wikipedia.org



# மனிதாபிமானம்

இன்றைய குழப்பமான சமூகவாழ்விலே மனிதனுக்கு நம்பிக்கை ஊட்டும் ஒரே பண்பு சமூகத்திலே ஆங்காங்கே காணப்படும் மனிதாபிமானந்தான் பெற்றோர், பிள்ளைகள் சகோதரர்கள் என்ற நிலை தாண்டி உற்றார், உறவினர் என்ற உறவு தாண்டி அனைத்து மக்களிடமும் மனிதன் காட்டும் பரிவே மனிதாபிமானம்.

எதிரியிடமும் அன்பு காட்டிய மகாத்மா காந்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்த பெரியார், கிராமங்கள் தோறும் பாடசாலைகள் நிறுவிபல லட்சக்கணக்கான மக்களின் கல்விக்கண் களைத் திறந்து வைத்த காமரராஜர் இவர்கள் எல்லோரும் இதைச்சாதித்தமை, அவர்களை உள்ளத்தில் நிறைந்திருந்த மனிதாபிமானத்திலேயேயாகும்.

ஆதிக்க வெள்ளை இனத்தால் அடிமைகளாக ஆக்கப்பட்டு சொல்லொணாத் துயரம் அனுபவித்த நீக்ரோ அடிமைகளின் விடுதலைக்காக தென்மாநில வெள்ளை இன வெறியருடன் போர்தொடுத்து அவர்களின் அடிமைத்தனத்தை அகற்றினார். "ஆபிரகாம் லிங்கன்" தொடர்ந்தும் ஐக்கிய அமெரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்ட இன ஒதுக்கல் கொள்கைக்காகப் போராடி தன்னுயிர் நீத்தார் "மாட்டின் லூதர்சிங்"

கிராமியப் போரிலே காயப்பட்ட போர் வீரர்களின் அவலநிலை கண்டு பரிதாபப்பட்டு அவர்களைப் பராமரித்து சிகிச்சை அளித்த "புளோரன்ஸ் நைற்றிங்கேள்" பெண்கள் வரிசையில் மனிதாபிமானப் பணியில் ஒரு விடிவெள்ளியாகும். தாதிமார் சேவையை ஆரம்பித்த இவரால் இன்று உலகிலே எத்தனையோ பெண்கள் மனிதாபிமானப் பணிபுரியும் தாதிமார் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் பிறந்து, கல்வியில் பெண்களுக்கிருந்த எவ்வளவோ தடைகளைத் தாண்டி மருத்துவம் படித்து இந்தியாவில் முதல் பெண் மருத்துவராகவும் முதல் பெண் சட்டச்சபை உறுப்பினராகவும் உயர்ந்து பெருமை பெற்ற அன்னை முத்து லட்சுமி ரெட்டியின் மனிதாபிமானப் பணி பெண்ணினத்துக்கு பெருமை சேர்ப்பதாகும்.

பருவமடைந்த தாழ்ந்த குலப் பெண்களை கடவுளுக்கென நேர்ந்து அவர்களை தனவந்தர்கள் போகப்பொருளாக உபயோகிக்கும் அருவருக்கத்தக்க சடங்கு தமிழ்நாட்டில் வழங்கி வந்தது. ஆணாதிக்கம் நிறைந்த தமிழக சட்ட சபையில் தனியாக எதிர்த்து நின்று இந்தக்கொடிய சடங்கை இல்லாமல் செய்தவர் அன்னை முத்துலட்சுமி செட்டி, எவ்வளவோ வசதிகளுடன் வாழவேண்டிய கல்வித்தகைமைகள் பதவிகள் இருந்தும் புற்று நோயிலும் ஏனைய நோய்களாலும் அவதிப்படும் ஏழை நோயாளர்களுக்காக அவர் ஆற்றிய தொண்டு உள்ளத்தை உருக்குவன ஏன் நமது காலத்திலேயே ஐரோப்பாவின் வசதியான வாழ்க்கையை விட்டு இந்தியா கல்கத்தா சேரிவாழ் தொழுநோயாளர்களோடு சேரியில் தங்கி அவர்களுக்குத் தனது வாழ்நாளில் இறுதிக்கட்டம் வரை மனிதாபிமானத் தொண்டாற்றினாரே அன்னை தெரேசா இவரது சேவையை மனிதாபி மானத்துக்கு வேறு உதாரணம் வேண்டுமா?

இன்று உலகில் ஏற்பட்டுள்ள அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சியினால் பலதுறைகளும் அபிவிருத்தி அடைந்துள்ளன. உயர்ந்த கல்வி வசதிகள் மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதிகளெல்லாம்

பல மடங்கு உயர்ந்துள்ளன. ஆனால் இவற்றையெல்லாம் சாதாரண மக்கள் அனுபவிக்க முடியாத அளவு அவற்றின் கட்டணங்களும் உள்ளன. ஏன் உணவு, உடை, கல்வி, மருந்துவம் போன்ற வாய்ப்புகள் கூடக்கிடைக்காமல் பல ஏழை மக்கள் வாடுகிறார்கள். எல்லா வசதிகளும், பொருட்செல்வம், கல்விச் செல்வம், பிள்ளைச் செல்வம் எல்லாம் வாய்த்த சிலருக்கு மனதில் நிம்மதி இல்லை இரவில் தூக்கம் இல்லை. அதிகளவு செல்வமாக வளர்ந்தபையன் போதைக்கு அடிமையாகியிருக்கலாம் அதிக உரிமை கொடுத்து வளர்த்த பெண் தப்பான வழியில் போயிருக்கலாம். உயிருக்குயிராக நேசித்த குடும்ப உறுப்பினர் காலமாகியிருக்கலாம். இத்தனைக்கும் தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாக அவர்கள் இருக்கலாம். இவ்வாறு மனமுடைந்துள்ள மக்களுக்கு மன ஆறுதல் சொல்வதே மனிதாபிமானத்தின் முக்கிய பண்பாகும்.

**ஆக்கம் : சி.ஜனுபன்**

**தரம் : 9**

**சான்று : கட்டுரைச்சுரங்கம்**

# கண்நோய்

தற்போது கண்நோய் ஆனது மிக வேகமாக நாடு எங்கும் பரவிக்கொண்டு வருகின்றது. இது அடினா என்ற ஒரு வைரஸத் தொற்றினால் தான் இந்தக் கண்நோய் பரவி வருகிறது. இந்த வைரஸ் தொற்று பெற்று கண்நோய்க்கு உள்ளாகும் ஒருவரின் கண்ணீர் மற்றவரில் படுவதால் இந்நோய் தொற்றுகிறது. ஆகவே கண்நோயாளரின் கண்ணீர்த்துளிகள் அவர் பாவித்த பொருட்களிலும் சென்ற இடங்களிலும் காணப்படும். உதாரணமாக நோயாளி பயன்படுத்தும் துவாய், கட்டில், கோப்பை போன்ற உபகரணங்களிலும் இக்கண்ணீர்த் துளிகள் தெறித்திருக்கும் இவை பிறரின் கைபட்ட பின்னர் அவர் தம் கைகளால் கண்ணை துடைத்தாலோ கசக்கினாலோ அக்கண்ணீர் கண்களில் சேர்ந்து கொள்ளும்.

இந்நோய் தாக்கினால் இவ் அறிகுறிகளைக் கொண்டு இனங்காணலாம். இவர்களுடைய கண்ணில் வேதனை காணப்படும். இவர்களது கண்கள் வீங்கும், கண்கள் செந்நிறமாக மாற்றம் அடையும். கண்ணில் இருந்து கண்ணீர் வடியும். கண்ணை ஒளி வீசும் பக்கம் திருப்ப கஸ்டப்படல்.


இக்கண்ணோய் பொதுவாக 3 நாள் நீடிக்கும். சில வேளை இதைவிட நீடித்தாலோ தாங்கமுடியாத வேதனை என்றாலோ வைத்தியரை நாடவேண்டும். வைத்தியரின் ஆலோசனை இன்றி எந்த மருந்துகளையும் கண்ணில் விடக்கூடாது. விட்டால் விசக்கிருமிகள் பக்ரீரியா போன்ற பாதிப்புக்கள் ஏற்படும் இதனால் இதைவிட வேறு நோய்களுக்கு ஆளாகும் நிலைமையும் உண்டு இதனால் நோயாளிகள் வீட்டிலேயே இருந்து ஓய்வு எடுப்பது நன்று.

**ஆக்கம் : சி.சிவநீவன்**

**தரம் : 9**

# Mahathma Ghanthi

Mahathma Ghanthi is a great leader the world ever had. He is such an important person in the world history as well as in Indian history. In Indian history Ghanthi is a very important person. He is honoured as the Father of India due to his greatest serving to his country.



Mahathma was born on 2nd October 1869 at Borbandar a small village in Gurajat in India. His childhood name is Mohanadas Karam hand Ghanthi. In his small age he liked Arichchandran drams. He watching those dramas got stucked to the great Arichchandra's principals and followed those principles in his entire life.

He married a 7 years old girl at his age of thirteen. When he wanted to shidy more he was in a position to go to London. When he went to London his Mother told him a lot of good thoughts. He followed all those thought as religion and become as a full fletched scholar.

He went to South Africa to shidy law. There be saw the Indians and South Africa majorily Black suffering under the hands of White minorily. He fought for their freedom with the Ahimsa way Sathyagraha.


He found victory too and refurned India. In India too people are suffering under the hands of the British. He fought against the British in a peaceful way. He did not have courage over armed struggle. That is why he succeeded in his work. He for to get freedom of India, done Dundee walk, uppu Sathyagraha and Vellayane veliyera movement etc. Due to his and other Sedapida's hardwork India gain freedom and in 1947 in January 30 Gandhi was shot to death by a Hindu named God shay because Ghanthi being mercy to all the human being.

Ghanthi is a great leader de to his greatnedd world famous Indian puet Raveendranath Thagoor called him as Mahathma thereafter he is honoured as Mahathma Ghanthiji by the whole world.

**T.Vickneswaran**
A/L 2013

# தாஜ்மகால் ஏன் கட்டப்பட்டது?


முகலாயப் பேரரசர் ஷாஜஹான் 17ம் நூற்றாண்டில் இந்தியாவை ஆண்டு வந்தார். 1612ம் வருடம் அவர் ஆர்ஜீம்ந்த் பானு பேகம் என்ற பெண்ணை திருமணம் செய்தார். அவள் ஓர் அழகும். புத்திசாலித்தனமும் ஒருங்கே பொருந்திய அரசகுமாரி. அவள் மீது தீராக்காதல் கொண்ட மன்னர் அவளை மும்தாஜ்மகல் என்றே அழைத்து வந்தார். மும்தாஜின் கனவில் ஒரு நாள் ஒரு அற்புத தாஜ்மகால் கட்டடம் தோன்றியதாம். கனவில் கண்ட அற்புதக் காட்சியை அன்புக் கணவரிடம் வருணித்த மும்தாஜ் தன் மறைவுக்குப் பின் அமரத்துவம் வாய்ந்த தங்கள் காதலின் நினைவுச் சின்னமாக இதே மாதிரி கட்டடம் எழுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். 1631ல்ல் புரஹான்புர் என்ற ஊரில் பிள்ளைப் பேற்றின் போது மும்தாஜ் உயிர் துறந்தாள். அவளது மறைவினால் மனமுடைந்த ஷாஜகான் சிங்காசனத்தையே துறக்க முற்பட்டார். கடைசியில் மனம்தேறிய மன்னர் தமது காதலை அமரத்துவம் பெறச் செய்ய இவ்வழகிய சின்னத்தை எழுப்ப முயன்றார்.



அபூர்வ அழகுவாய்ந்த கட்டடத்தை அமைக்கும் நோக்கத்துடன் ஷாஜஹான் இந்தியா. பாரசீகம். மத்தி ஆசியா. அரேபியா. துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து சிற்பிகளையும் கட்டடக் கலைஞர் களையும் வரவழைத்தா் கட்டடத்தின் வரைபடம் தயாரானதும் 1632ம் ஆண்டு ஆக்ராவில் யமுனையாற்றின் தென்கரையில் ஆரம்பித்து இருபது ஆண்டு காலம் அயராது உழைத்து இந்த அழகு மாளிகையைக் கட்டி முடித்தனர். இதை கட்டி முடிக்க. அக்காத்திலேயே நான்கு கோடி ரூபாய் செலவாயிற்று.


தாஜ்மகாலின் கட்டடமனை நீள் சதுரவடிவானது. நீளம் 580 மீட்டர் அகலம் 30 மீட்டர் உயரம் 7 மீட்டர் இதன் நான்கு மூலைகளிலும் நான்கு தூபிகள் அமைந்துள்ளன. இச்சதுக்கத்தின் நடுவே 60 மீட்டர் உயரத்தில் தாஜ்மகால் கம்பீரமாக நிற்கிறது. பளபளப்பான வெண்ணிற சலவைக்கல்லால் ஆன இவ்வழகிய கட்டிடத்தின் சுவர்களில் கருநிறச் சலவைக்கற்கள் பதித்து அவற்றின் மீது குரான் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே 12 ரகமான விலையுயர்ந்த கற்களின் மீது அழகிய பூ வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன.

தாஜ்மகால் கட்டத் தேவையான கற்கள் அரேபியா, எகிப்து, திபேத்து மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து தருவிக்கப்பட்டன. தாஜ்மகாலின் உட்பகுதி எண்கோண வடிவானது. இதன்கீழே மும்தாஜ் மற்றும் ஷாஜஹானின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. கல்லறைகள்மீது விலைமதிப் பற்ற இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.



ஷாஜஹான் யமுனையின் மறுகரையிலும் தனக்கென இன்னொரு தாஜ்மகால கட்ட விரும்பினார் ஆற்றின் மீது வெள்ளியால் பாலம் கட்டி இரண்டு கட்டடங்களையும் இணைப்பதாகவும் திட்டம் இருந்தது. ஆனால் அவரது இந்த ஆசை நிறைவேறவில்லை ஏனெனில் அவரது மக்கள் ஆட்சிபீடத்தை அடைய ஒருவரையொருவர் போட்டியிட்டு தந்தையை சிறையில் அடைத்தனர்.

சிறையில் இருந்த வாறு தனது அழியாச் சின்னத்தை ஷாஜகான் பார்ப்பாராம். தாஜ்மகால் எல்லா நாடுகளிலிருந்து வரும் பயணிகளை கவர்கின்றது. ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான மக்கள் இங்கு வருகிறார்கள். பௌர்ணமி இரவில் இது வெள்ளி மாளிகை போல் மின்னும் பளிங்கின் மீது பதித்துள்ள வெண் முத்துக்கள் தாரகை போல் ஒளி வீசும்.



ஆக்கம் : பா.வாசவன்

தரம் 9

# அன்னை

பத்துமாதம் எனை சுமந்து - இப்
பாரினிலே பக்குவமாய் எனை ஈன்றெடுத்து
தன் உதிரமதை பாலாக்கி உவந்தளித்து
எனைத்தாலாட்டி வளர்த்த தாயே
இரவுபகலாய் கண்விழித்து
இயந்திரம் போலவே வேலை செய்து
எங்கள் வாழ்வினை உயர்த்திடும்
அன்னையே உன்னை ஆராதிக்கிறேன்.



தொப்புள் கொடியில் தொடங்கிய நம் உறவு
தொலைதூரம் சென்றாலும் - ஒரு
குண்டு மணியளவும் குறையாது தாயே
கேடில் விழுச்செல்வம் கல்வி
அதற்கொரு கேடில்லாமல் எனை
வாழவைத்து வழியும் காட்டிடும்
அன்னையே உன்னை ஆராதிக்கின்றேன்.


எத்தனை வகை செல்வங்கள் இருந்தாலும்
அன்னையன்புக்கு இணை உண்டோ
எத்தனை கொடுந்துயரமேதும் - எனை
சூழ்ந்து நின்றாலும் தூணாக நின்று
தூங்கி வாழ்வுக்கு வழியமைக்கும்
அன்னையே உன்னை ஆராதிக்கிறேன்.

அன்புக்குத் தாயுண்டு அறிவுக்குத் தந்தையுண்டு
ஆற்றுதற்குத் தெய்வமுண்டு என இயம்பி
பண்போடு பலகதைகள் பாசமுடன்
எடுத்துச் சொல்லி நான்
அலையோடு விளையாட கலையோடு
இசைபாட கலைமகளாய் வந்த – என்
அன்னையே உன்னை ஆராதிக்கின்றேன்.

நிலவு காட்டி உணவு ஊட்டி
நித்தமும் எனைத் தூங்க வைத்து – தாயவள்
இன்று நிலவுக்கு போக வேண்டும்
புதுமைகள் படைக்க வேண்டும் - என
நெஞ்சுரம் எனக்களித்துப் பொறுமைக்கு
இலக்கணமாய் என் வாழ்வுக்கலங்கரை விளக்காயான
அன்னையே உன்னை ஆராதிக்கின்றேன்.

எக்காலத்திலும் எவ்யுகத்திலும் - நாம்
நினைத்தாலும் செல்ல முடியாத இடம்
உன்கருவறை தானம்மா
பள்ளிப்பருவமதில் துள்ளித்
திரியும் என் கண்ணெதிரே கடவுள்
தோன்றி வேண்டும் வரம்தந்தால்
நான் கேட்பேன் மீண்டும்" என் தாய்க்கு
மகனாக வேண்டும் - என்றும்
என் அன்னையை நான் ஆராதிக்க வேண்டும்

ஆக்கம் : சி.ஜனுபன்
தரம் 9



# உயிரில் பூத்த தோழமை

ஒரு காத்திருப்பின்
இடைவெளியில்
நட்பில் கரைந்த
ஞாபகங்கள்

தனக்கு வேண்டியதை
"தா" என்று கேட்கவும்
கேட்காமலே
எடுத்துக்கொள்ளவுமான
உரிமைப் பத்திரம்
மௌனத்தின் பாஷை
இத்தனை
தெளிவாய் இருக்குமா
உயிரில் கேட்கிறதே

ஓவியம் வரைகையில்
தூரிகையின்
பெருமூச்சு
புரியும் நிதானம்
புலன்களில்
வண்ணங்களை
வாரியிறைத்து
எனக்கு மட்டுமாய்
இயற்கை
சந்தோஷிக்கிறது

உன்னை நானும்
என்னை நீயும்....
பகிரும் பொழுதுகளில்
பசியில்லை
தாகமில்லை
மனவெளியில்
மகிழ்ச்சி
ஆயிரம் மழைத் துளிகளால்
வர்க்ஷிக்கிறது

காதலின் சுகம்
போலவே
நட்பின் இதயமும்
ஒரு புதிராய்
இதிரும் மனதின்
தலை தடவுகிறது

ஒரு நட்பின் புண்ணகைக்கு
உதடுகள்
தேவையில்லை
இதயம் போதுமே!!!

ஆக்கம் : ச.கஜந்தன்
தரம் 11



# கல்வி

நில்லா தென்றும் சுற்றும் உலகில்
நிலைத்து நிலைத்து நிற்பது கல்வி
பொல்லா மனிதரும் நீரும் தீயும் சூழலும் காற்றும்
அள்ளிச் செல்ல முடியாதது கல்வி

அல்லும் பகலும் சொல்லிப் பழகத்
தன்னால் வருவது கல்வி
வெல்லும் வழியை எமக்குத் தருவது
எல்லையில்லாத கல்வி

கல்வி கற்றால் முகத்தில் இரண்டு
கண்கள் இருப்பது சரியாகும்
இல்லாவிட்டால் இரண்டும் மொழியாகும்

கல்லா மூடர் வாழ்வில் என்றும்
துன்பக் காற்றே வீசும்
கல்வி உள்ளவர் நலமே வாழ்வார்
என்றே என்றும் ஊர் பேசும்



எல்லாம் வல்ல இறைவன் அருளால்
இனிய கல்வியை கற்போம்
கல்வியை நன்கு கசடறக்கற்று
அதன் படியே நிற்போம்

ஆக்கம் : பிருதிவிராஜ் ஹரிராஜ்
தரம் : A/L (2014)

# விஞ்ஞான மருத்துவ கண்டுபிடிப்புகள்

| கண்டுபிடிப்பு | கண்டு பிடிப்பாளர் | ஆண்டு | நாடு |
|---|---|---|---|
| குளிர்சாதனப் பெட்டி | ஜேம்ஸ் ஹரிசன் | 1850 | அமெரிக்கா |
| சைக்கிள் | கிரிக் பாட்ரிக் மக்மிலன் | 1836 | அமெரிக்கா |
| கைக்கடிகாரம் | புாத்லோமோ மான்ஃப்பி | 1462 | இத்தாலி |
| நுணுக்குக் காட்டி | து.ஜோன்சன் | 1590 | நெதர்லாந்து |
| கல்குலேற்றர் | புஸ்கால் | 1642 | பிரான்ஸ் |
| நீர்மூழ்கிக் கப்பல் | டேவிட் புஸ்னல் | 1776 | அமெரிக்கா |
| மின்சார பற்றரி | அலெக்சான்ரா வேல்ரா | 1880 | இத்தாலி |
| பெற்றோல் கார் | கார்ப்பென்ஸ் | 1888 | ஜேர்மனி |
| தொலைக்காட்சி | மின்பிடிஃபிரான்ஸ் வொர்த் | 1927 | அமெரிக்கா |
| X கதிர் | வில்ஹெம் முரன்ட்ஜன் | 1895 | ஜேர்மனி |
| நூல் நூற்கும் இயந்திரம் | ஜேம்ஸ் கிறீவ்ஸ் | 1767 | - |
| அணுகுண்டு | ரொபர்ட் ஓமன் ஹீமர் | 1945 | அமெரிக்கா |
| இசைத்தட்டு | ஜுசபீட்டர் கோல்ட் | 1948 | அமொக்கா |
| இயந்திர துப்பாக்கி | ஜேம்ஸ் பைக்கின் | 1718 | பிரிட்டன் |
| செயற்கை இதயம் | வில்லியம் கோல்ட் | 1957 | நெதர்லாந்து |
| டிரான்சிஸ்ரர் | பார்ட்டீன் ஸ்ஷாக்லீ பிரட்டைன் | 1895 | அமெரிக்கா |
| டீசல் இயந்திரம் | ருடோல்ஃப் டீசல் | 1832 | அமெரிக்கா |
| திரைப்படம் | நிக்கோலஸ் ஜீன்லூமியர் | 1826 | அமெரிக்கா |
| பலூன் | ஹர்த்தஸ் ஜாக்வஸ் - ஜோசப் | 1797 | அமெரிக்கா |
| பறக்கும் குடை | ஏ.ஜே.கார்னெரின் | 1877 | பிரான்ஸ் |
| புகைப்படக்கருவி | ஜீனியர் நீப்ஸ் | 1826 | - |
| பேனா | லுஸயிஸ் இ.வாட்டர்மன் | 1888 | அமெரிக்கா |

**ஆக்கம் : மருதநாயகம் டிலக்சன்**

**சான்று : பொதுஅறிவுப் புத்தகம்**

# சமாதானம்

உலகின் நாலா பாகங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான மக்களின் அத்தியாவசியமான தேவையாக சமாதானம் மாறியுள்ளது. ஆதிகாலத்தில் மனிதர்கள் அனைவரும் சமாதானத்துடன் வாழ்ந்து வந்தார்கள் அதற்கு காரணம் அன்றைய மனிதர்கள் மனிதர்களுக்கு மனிதர்கள் சண்டை பிடித்து இல்லை. பொறாமைகளும் அவர்களிடத்து இல்லை. அவர்கள் தமது அத்தியாவசிய தேவைகளை (உடை, உணவு, உறையுள்) ஆகிய தேவைகளை மட்டும் நிறைவேற்றி வாழ்ந்தனர். ஆனால் இன்றைய உலகம் நவீன உலகம் அதுவும் போட்டிகள் கொண்ட உலகமாக மாறிவிட்டது. இவ்வுலகத்தில் நாடுகளுக்கு நாடுகள் சண்டை, பிரதேசத்திற்கு பிரதேசண்டை என இருக்கின்றது. இவ்வுலக நாடுகளிடையே போட்டியா அல்லது ஆயுத உற்பத்தி நடந்து வருகின்றது. ஆயுதங்களே இன்றைய உலகின் சமாதானத்திற்கு தீங்கு விளைவிக்க முக்கிய காரணியாக உள்ளது. உதாரணம் : 2ம் உலகப்போரின் போது ஜப்பானிய ஹிரோசிமா நாகாசி ஆகிய இடங்களில் அமெரிக்கா அணுகுண்டு தக்குதல் மேற்கொண்டது. இதன்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர், அங்கவீனம் உற்றனர். இன்னும் அதன் பாதிப்பு நின்றுவிடவில்லை. இவ்வாறு ஆயுதம் என்ற அஃறினைப்பொருள் அதாவது மனிதனால் செய்யப்பட்ட பொருளாக மனிதன் சமாதானத்தை பறித்து வைத்துள்ளது.

### சமாதானத்தின் தேவைகள்

ஒரு நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் சமாதானம் என்பது இன்றியமையாத ஒன்று ஆகும். சமாதானம் என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் பல்வேறு வகையில் தேவையான ஒன்றாக உள்ளது. ஒரு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு பிரஜையும் சுதந்திரமாக வாழ வழியமைக்கலாம். இவ்வாறான சுதந்திரத்தின் மூலம் நாட்டை அபிவிருத்தி பாதை நகர்த்தி செல்லலாம். சுதந்திரம் என்பது ஒவ்வொரு பிரஜையும் கௌரவமான வாழ்வை வாழ்வதற்கு சகல உரிமை பெற்று கொள்வதற்கும் வழியமைக்கும் ஒரு கருவி ஆகும். அக்கருவியை பெற்றுக்கொள்வதற்கு சமாதானம் என்பது அவசியமாகும். சமாதான வாழ்வை ஏற்படுத்துவதன் மூலம் பாதுகாப்புக்கான செலவுகளை வரவு செலவு திட்டத்தில் குறைத்து நாட்டை ஒரு அபிவிருத்தி பாதையில் நகர்த்தலாம்.

உதாரணம் இலங்கை கடந்த 30 தசாப்பதங்களை யுத்தம் காரணமாக இன்னும் அபிவிருத்தி அடைந்த நாடாக உருவாக முடியவில்லை ஆனால் நோர்வே போன்ற நாடுகள் 2ம் உலக மகாயுத்தத்தில் பின்னர் அமெரிக்காவில் மாரசஷல் திட்டத்தின் கீழ் இருந்தநாடுகள் ஆகும். ஆனால் அங்கு சமனான வாழ்வின் காரணமாக ஐரோப்பிய கண்டத்தின் ஒரு வளர்ச்சியடைந்த நாடாக காணப்படுகிறது.

எனவே, சமாதானம், சுதந்திரம், புரிந்துணர்வு என்பன இன்றைய உலகில் அவசியமானதாகும் ஆனால் எது இன்றைய உலகில் அருகிவிட்டது. எனவே அதை பாதுகாப்பதும், கட்டி யெழுப்புவதும் நம் ஒவ்வொருவரது கடமை ஆகும். நீ உன்னை திருத்து உலகம் தானாக திருந்தும்'' என்பது போல நாம் ஒவ்வவொரு வரும் சமாதான வாழ்விற்கு அத்திவாரம் இட்டோடே யானால் இவ்வுலகு சமாதான உலகமாக மாறும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம்.

**ஆக்கம் : ஆ.கிருசிகன்**
A/L 2014

# டைனோசர்

ஏறத்தாழ 19 கோடி ஆண்டுகளுக்கு முன் நமது பூமி டைனோசர் எனப்படும் ஊர்வன வகையை சார்ந்த இராட்சதப் பிராணிகள் கையில் இருந்தது. இந்த கிரேக்கச் சொல்லிற்கு 'பயங்கரப்பல்லி' என்று பொருள். சுமார் 7 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்த இனம் அறவே மடிந்து விட்டது. பூமியின் மாறிவரும் சூழ்நிலை இவற்றுக்கு ஒத்துவரவில்லை என்று நாம் ஊகிக்கலாம். இருந்தும் விஞ்ஞானிகள் இது தொடர்பாக பற்பல நடவடிக்கைகளை செய்கின்றனர். உலகில் பல்வேறு இடங்களில் இவை வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன மற்றும் அழிந்து போனதற்கான காரணம் பற்றி உயிரியல் நிபுணர்களிடையே கருத்து ஒற்றுமை இல்லை.

குறுகிய காலுடைய டைனோசர்கள் பின்னங்காலைப் பயன்படுத்தி நடமாடின. பொதுவாக இவை பெருத்த உடல் கொண்டவை: நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியன. இவற்றுள் பெரும்பாலானவை மெல்லிய தோல் உடையவை. சில செதில்மூடிய தோலையும் மற்றும் சில எலும்பு போன்று கடுமையான முசுடுகளையும் கொண்டிருந்தன. சில டைனோசர்கள் புல் உண்பவை. மற்றவை மரம் - செடிகளை உணவாகக் கொள்பவை ஊர்வன இனத்தை சார்ந்தவை யாதலால் டைனோசர்கள் இந்த இனத்தின் தன்மையைக் கொண்டிருந்தன. ஆதியில் இவை உருவத்தில் சிறிதாக இருந்தால் பின்னங்காலை மட்டும் கொண்டு நடமாடின மாறிவரும் நிலைக்கு ஏற்ப டைனோசர்களின் உடல் பெருக ஆரம்பித்தது.

டைனோசரை முக்கியமாக இரண்டு வகையாக பிரிக்கலாம். லூரிஸ்கியா, ஆர்னிதிஸ்கியா ஆகும். லூரிஸ்கியாவின் பின்பகுதி பல்லி போன்றும் ஆர்னிதிஸ்கியாவின் பின்பகுதி பறவை போன்றும் காணப்படும். எல்லா வகை டைனோசர்களும் 7 கோடி ஆண்டுகளுக்கு முன் அறவே மறைந்து விட்டன.பூமியின் மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ப இவை தம்மை மாற்றிக் கொள்ள இயலவில்லை. பத்து இருபது கோடி ஆண்டுகள் வாழ்ந்து மடிந்த இந்தப் பிராணிகளைப் பற்றிய விபரங்கள் இவற்றின் புதை வடிவங்களின் ஆராய்ச்சியிலிருந்து தெரிய வந்துள்ளது.




**ஆக்கம் : பா.வாசவன்**

**தரம்** : 9

சான்று : Children knowledge bank book

# உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரம்



இவ் கோபுரம் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் அமைந்துள்ளது. இது மென் இரும்பினால் நிர்மாணிக்கப்பட்ட இராட்சத கோபுரமாகும். குஸ்தான் அலெக்ஸாண்டர் ஈபிள் என்ற சிவில் பொறியியலாளரால் வடிவமைக்கப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டைக் கொண்டாடும் முகமாக பாரிஸ் நகரில் 1889ல் உலக கண்காட்சிச் சந்தை நடைபெற்றது. அக்கண்காட்சிக்குப் பொருத்தமான நினைவுச் சின்னமாக இது அமைக்கப்பட்டது.

மென்னிரும்பினால் அமைக்கப்பட்ட இக்கோபுரத்தின் வேலைகள் 1887ல் ஆரம்பமாகி 1889ல் முடிவு பெற்றது. இவ்விரண்டு வருடங்களில் குறைந்த எண்ணிக்கை யான வேலையாட்களைக் கொண்டு குறைந்த செலவில் இக்கோபுரம் நிர்மாணிக்கப்பட்டது. இதன் தற்போதைய உயரம் 322 அடி ஆகும். இதனை உருவாக்க 6300 அமற்றிக்தொன் இரும்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. 18000 பாகங்களும் 2500000 ரிவேட் ஆணிகளும் பயன்படுத்தப்பட்டு இவ் அழகான கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கோபுரததின் 3 மட்டங்களில் காட்சிக்கான கூடங்கள் கொண்ட மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1வது மேடையில் சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் உச்சியில் வானிலை அவதான நிலையம், வானொலி தொடர்பு நிலையம், தொலைக்காட்சி ஒளிபரப்பு அன்ரனா என்பனவும் அமைக்கப்பட்டுள்ளது. உச்சியை அடைவதற்கு படிக்கட்டுக்களும், மின்னுயர்த்திகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் உச்சியிலிருந்து பார்க்கும் போது பாரீஸ் நகரம் முழுவதும் காட்சியளிக்கும்.

ஆக்கம் :மருதநாயகம் டிலக்சன்
தரம் : 9

# அன்பை வளர்த்திடுவோம்

அன்பு என்பது மூன்றெழுத்து
அதன் பயனோ பல எழுத்து
வன்பு என்பதைத் தவிர்த்து விட்டால்
வளத்துடனே வாழ்ந்திடலாம்

எல்லார் மீதும் அன்பு வைத்தால்
எதிரியின்றி வாழ்ந்திடலாம்
நல்லார் மனதையும் கவர்ந்து
நன்றாய் நாமும் வளர்ந்திடலாம்

உதவி செய்ய உதவுவது
உன்னதமான அன்பேதான்
பதவி உயர்வைத் தந்து எம்மைப்
பண்பாய் நன்றாய் வளர்த்திடுமே

விட்டுக்கொடுப்பை வளர்ப்பதுமே
விலை மதிப்பற்ற அன்பேதான்
துட்டு ஒன்றும் இல்லாவிடினும்
துன்பம் இல்லை அன்பினால்

சண்டை சச்சரவுகளை அழித்திட்டு
சகபாடிகளை வளர்க்க உதவிடுமே
பண்பாட்டை மறக்காமல் - நாம்
பண்பாய் அன்பை வளர்த்திடுவோம்.

ஆக்கம் : சி.சிவகரன்
தரம் : 9



# மாலைப்பொழுது

மாலைப்பொழுதினிலே மலர்கள் விரிய
மாமலைத்தென்றல் மகிழ்ந்து வர
கானகக் குயில் சோகமாய்க் கூவ
காலையும் மறைந்தது மாலையும் ஆனந்தமாய்

மாலை வானமும் மரகத மஞ்சளாக
அந்த வேளையில் அமைதியும் குடிகொள்ள
வீடுகளில் விளக்குகள் பளிச்சிட
மாலைவானம் மதியை வரவேற்க

தோகைமயில் ஆனந்தமாய் ஆட
கடற்கரையில் சூரியன் மெதுவாய் ஓட
காகங்கள் தங்கள் கூடுகளை நாட
புலவர்கள் மகிழ்ந்து அழகாய்ப் பாட

உழவர்கள் ஆர்வமாய் வீடு செல்ல
உடுக்கள் ஆகாயத்தில் கவர்ந்து செல்ல
மங்காத இருள் கவிழ்ந்து கொள்ள
மாலைப் பொழுது வந்ததே மெல்ல

ஆக்கம் : பா.அனுஜன்
A/L (2014)



# நவீன உலகின் கண்டுபிடிப்புகள்

| ஆண்டு | கண்டுபிடிப்பு | கண்டுபிடித்தவர் | நாடு |
|---|---|---|---|
| 1250 | உருப்பெருக்கும் வில்லை | றோசர் பேகன் | பிரித்தானியா |
| 1450 | அச்சு இயந்திரம் | யோ கட்டன்போர்க் | ஜேர்மன் |
| 1504 | பொக்கற் கடிகாரம் | பீற்றர் ஹென்லீன் | ஜேர்மன் |
| 1573 | நீர் வெப்பமானி | கலிலியோ | இத்தாலி |
| 1608 | தொலைகாட்டி | ஹன்ஸ் விபார்சேஷ | ஒல்லாந்து |
| 1642 | கூட்டற் பொறி | பிளஸ்ஸஜ பாஸ்கல் | பிரான்ஸ் |
| 1668 | தெறிப்பு தொலைநோக்கி | ஐசாக் நியூட்டன் | பிரித்தானியா |
| 1678 | நீராவிப்பம்பி | தோமஸ் சவேரி | பிரித்தானியா |
| 1752 | மின்னல்தாக்கி | பெஞ்சமின் பிறாங்ளின் | அமெரிக்கா |
| 1783 | பலூன் விமானம் | மோன்சேஷல் விங்கர் | பிரான்ஸ் |
| 1785 | விசைத்தறி | எட்மண்ட் காட்றைட் | பிரித்தானியா |
| 1786 | நீராவிப்படகு | ஜோன் பிறஸ் | அமெரிக்கா |
| 1776 | சின்னம்மை வக்சின் | எட்வெட் ஜென்னர் | பிரித்தானியா |
| 1814 | புகையிரத வண்டி | ஜோர்ஜ் ஸ்ரிவின்ஸன் | பிரித்தானியா |
| 1820 | கல்வனோமானி | கிறிஸ்ரோ சுவைச்சர் | ஜேர்மன் |
| 1821 | மின்மோட்டர் | மைக்கல் பரடே | பிரித்தானியா |
| 1823 | மின்காந்தம் | வில்லியம் ஸ்ரேஜன் | பிரித்தானியா |
| 1830 | தையல் இயந்திரம் | பார் தெமிலி தேமோனிக் | பிரான்ஸ் |
| 1831 | தைனமோ | மைக்கல் பரடே | அமெரிக்கா |
| 1839 | துவிச்சக்கரவண்டி | ஹோர்பற்றிக் மக்மிலன் | பிரித்தானியா |
| 1885 | AC மின்மாற்றி | வில்லியம் ஸ்ரான்லி | அமெரிக்கா |
| 1891 | அசையும் படக்கமரா | தோமஸ் அல்வா எடிசன் | பிரித்தானியா |
| 1892 | வெப்பக்குடுவை | சேர் ஜேம்ஸ் டீவார் | பிரித்தானியா |
| 1893 | டீசல் எந்திரம் | றடோல்ப் டீசல் | பிரித்தானியா |
| 1903 | விமானம் | வில்பர் றைட் ஒவில் றைட் | அமெரிக்கா |
| 1911 | விற்றமின் | கஸ்மீர் பங் | போலண்ட் |
| 1922 | பேசும்படம் | ஹறு கேஸ் | அமெரிக்கா |

ஆக்கம் : அயந்தன்

தரம் : 8

# மனித விழுமியங்களில்
# பொதுச் சொத்துக்களைப் பேணுதல்

கடவுளின் படைப்புக்களில் மனிதனே மேலான படைப்பாகும். விலங்கு வாழ்க்கையிலிருந்து வேறுபட்டு மனிதன் மனிதனாக வாழ பின்பற்றப்படவேண்டிய பெறுமதிமிக்க பண்புகள் விழுமியம் எனப்படும். உயிர்களிடத்தில் அன்பு காட்டல், சேவை செய்தல், பொது சொத்துக்களைப் பேணுதல், மனஅடக்கம் என்பவை விழுமியப் பண்புகளில் அடங்கும். இந்த விழுமியப் பண்புகளில் ஒன்றான பொதுச் சொத்துக்களைப் பேணல் பற்றி இப்பொழுது பார்ப்போமானால்...

எல்லோருக்கும் பொதுவானதாகக் காணப்படும் சொத்துக்கள் யாவற்றையுமே பொதுச் சொத்துக்கள் என அழைக்கலாம். உதாரணமாக கோயில், பாடசாலை, பாடசாலைப் புத்தகங்கள், பேரூந்துகள் என்பவற்றை பொதுச் சொத்துக்களாகக் கூறலாம்.

எல்லோருக்கும் இலவசமாகக் கிடைப்பதும் பொதுச்சொத்துக்களே ஆகும். பொதுச் சொத்துக் களைப் பேண வேண்டியது எமது தலையாய கடமையாகும். ஆனால் தற்போது பொதுச் சொத்துக்களை அழிப்பதிலேயே எல்லோரும் குறியாகக் கொண்டுள்ளனர். ஏனெனில் இது நமது சொத்து இல்லை பிறரது தானே என நினைத்துக் கொண்டே இவர்கள் தமது நாச வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பொதுச் சொத்துக்களை உடைத்தும், அவற்றைத் திருடியும், அழிவடையச் செய்கின்றனர். ஆனால் நாம் அவர்களுக்கு புத்திமதிகள் கூறி பொதுச்சொத்துக்களை அழிவில் இருந்து மீட்க வேண்டும் இல்லாவிடில் எதிர்கால சந்ததியினருக்கு பொதுச்சொத்துக்கள் பயன்படாத வகையில் அழிவடைந்து விடும்.

நாம் பொதுச் சொத்துக்களை அழிவடைவதைத் தடுத்து அவற்றை நம் கண்களைப் போன்று பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உடைந்தவற்றை மீண்டும் திருத்தி அவற்றை பழையது போலவே மிக நன்றாக அதை எல்லோருக்கும் பயன்படுத்தத்தக்க வகையில் நாம் பேணல் வேண்டும்.

இப்பொழுது எல்லோரும் நவீன, தொடர்பாடல் வசதிகள் வந்து விட்டதால் அவர்கள் பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தாமலும் அதனை பாதுகாக்காமலும் உள்ளனர். இதனை மாற்றுவது இலங்கையில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுடைய கடமையாகும். பொதுச் சொத்துக்களை அழிவிலிருந்து பேணிப்பாதுகாப்போமென நாம் இன்றிலிருந்து உறுதியும் முடிவும் செய்வோம்.

**ஆக்கம் : த.சாள்ஷன்**

# நாணயம் வந்தது எப்படி?



உலகின் அதி அற்புத வளர்ச்சியின் அடிப்படைக் காரணம் அன்று தொட்டு மனிதனோடு ஒட்டி உறவாடிக்கொண்டு இருப்பது பணம் தான். இது கி.மு 7ஆம் நூற்றாண்டில் மிகச் சிறிய அளவிலான சிங்கத்தின் தலை பொறிக்கப்பட்ட நாணயங்கள் முதன் முதலாக அச்சடிக்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகளில் நாணயங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவே முதன் முதலாக 1661ல் நோட்டுக்கள் அச்சடிக்கப்பட்டன. சுவீடன் நாடுதான் முதன் முதலில் நோட்டுக்களை அச்சடித்தது என்றாலும் நோட்டுக்களைப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தது சீனா தான்.

இன்றைய நவீன உலகின் பணத்தேவை நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளது. மனிதன் இலகுவாக அதனைப் பெற்றுக்கொள்ளத் தான் எத்தனை எத்தனை நவீன இயந்திரங்கள் தோன்றுகின்றன. உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் நினைத்தவுடன் பணம் பெற்றுக்கொள்ள 'ஸ்டோ மெடிக்" மாலர் மெஷின்களும் மேலைநாடுகளில் பொருத்தப்பட்டிருக்கின்றன. டொலாரில் ஒருவர் போட்ட பணம் உலகின் எந்தப்பகுதியில் இருந்தும் அந்த நாட்டு நாணயமாகப் பெற்றுக்கொள்ள முடியும் அதுவும் 16 விநாடிகளில் என்றால் நம்பத்தான் முடியுமா. ஆனாலும் அது உண்மை

மணி என்றால் பணம் என்பது தெரியும் அந்த பணத்திற்கு மணி என்ற பெயர் எவ்வாறு வந்தது என்று தெரியுமா? ரோம் என்பது சுருக்கமாக அழைக்கப்படும் ரோமபுரியை கி.மு 344ம் ஆண்டில் காலிக் என்ற சக்கரவர்த்தி பிடித்து விட்டார் அதைக்கொண்டாட ஜீனோமோனிடா என்ற பெயரில் கோவிலொன்று கட்டப்பட்டது. கோயில் அருகில் தான் முதலாவது பணத் தயாரிப்புச்சாலை (மின்ட்) அமைக்கப்பட்டது. இங்கு உருவான பணத்தை 'மனேடா" என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அதுவே காலப்போக்கில் மணியாக மாறியது.

**ஆக்கம் : பா.அனுஜன்**
A/L (2014)

மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

மைதிலி நகைமாடம்

Maithely Nagai Madam

தங்க நகை
வியாபாரி



89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 2227902

Yarl Maithely
Nagai Madam

யாழ் மைதிலி நகைமாடம்

79Z, Sea Street, Colombo - 11
Tel : 2396239

மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

கலைவாணி
கல்வி நிறுவனம்


KALAIVANI
EDUCATION INSTITUTE



மானிப்பாய் வீதி, கோப்பாய்.

மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

R.Venkadesa Iyer



SOTHIDAPRAKASA
PRESS

சோதிட பிரகாச
இயந்திரசாலை

Press Road, Kokkuvil
அச்சுக்கூட வீதி, கொக்குவில்.

மனிதம் இதழிற்கு எமது நல்வாழ்த்துக்கள்

K.S.M
தொலைத்
தொடர்பு நிலையம்



இல. 146 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
மயூரிகா
நகைத் தொழிலகம்
அழகிய கலைநயம்.....
எழிலுறு தொழில் வளம்....
உயர்தரமிகு தங்க
நகைகளுக்கு.....
22 கரட் தங்க நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.
பருத்தித்துறை வீதி,
இருபாலைச் சந்தி.
Tel : 0776232919
021 4915788




மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
அன்பொளி
கல்வியகம்
சின்னவிழி அசைத்து
சிரித்து வரும் சிறுவர்களை
அள்ளி அணைத்து அரிய
கல்வி ஊட்டி வைப்போம்
யாழ். இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.




மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
நவீனரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளவும்
உறுதியான பற்களைப் பொருத்திடவும்
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும்
பல் கட்டும் இடமும்
கட்டுப் பற்களைச் சுத்தம் செய்வதற்கான
மாத்திரை விற்பனையில் உண்டு
Tel : 2486
564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளைகள் :
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
இல. 30 கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
இல. 91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.




மனிதம் இதழிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
சைவ உணவுகளை
வாங்குவதற்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
சித்தானந்த
சைவ
உணவகம்
புகையிரத வீதி, வவுனியா.


மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
அம்பாள்
பேக் ஹவுஸ்
Ambal
Bake House
இல.252, 254 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
இளவரசி
சேலைச்
சோலை
பட்டுப்புடவைகளின்
சாம்ராஜ்யம்
ELAVARASI
TEXTILE
SPECIALIST IN WEDDING SAREES
57, New Market, Jaffna.
இல.57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
Tel:021 2222503. Fax : 021 2228441



மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
ஆத்தியம்மை
மின்ஒட்டுத் தொழிலகம்
கிறில், கேற், யன்னல் போன்றவை
மிகவும் அழகு வாய்ந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
உரிமையாளர் :
கருணாமூர்த்தி (கண்ணன்)
Tel: 0774019451


மனிதம் இதழிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
K.K
போன்
சேவிஸ்
கையடக்க தொலைபேசிகளை
நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
K.K. Phone Service
No: 01, 1st Floor, New Market, Jaffna.
T.P: 021 222 8378, 0777571915, 0773151410
Fax : 021 222 4373
e.mail :n.s.R.Kumaran@gmail.com.



மனிதம் இதழிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
சீனா ஜூவலறி
Seena Jewellery
105, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
105, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 0771532446
உரிமையாளர் : T. சீனன்


மனிதம் இதழிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
மங்களகரமான வைபவங்களுக்கு ஏற்ற ஓர் கைராசியான இடம்
சனுசா
டெக்ஸ்டைல்
இல.33, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0776154289


மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
மதிபா
மருந்தகம் அன் பல்பொருளகம்
MATHIBHA
Pharmacy &
Grocery
இல.126, கோவில் வீதி,
முடமாவடி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
No: 126, Temple Road,
Mudamavadi,
Nallur,
Jaffna.


மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
MAARIAMMAN MOTORS
Point Pedro Road,
Kopay Centre,
Kopay
K.K.P. Phone Shop
& Net Cafe
Kopay South,
Kopay.
Tel / Fax : 021 223 1002


மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
அன்னை
புத்தகசாலை
7, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 9881


மனிதம் இதழிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
KSTe
World Net
Kanthasamy Kovil View,
Inuvil.
T.P : 0770230828

மனிதம் இதழிற்கு எமது நல்வாழ்த்துக்கள்

TJ

# துர்க்கா நகைப் பூங்கா

# THURKKA JEWELLERY PALACE



ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22
கரட்டில் செய்து கொடுக்கப்படும்.

இல. 256, கன்னாதிட்டி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

No. 256, Kannathiddy,
Kasthuriar Road,
Jaffna. T.P : 021 222 8831



மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

மிதி வண்டி உதிரிப்பாகங்கள், பாடசாலை,
உபகரணங்கள்,
அழகு சாதனப் பொருட்கள்
விற்பனையாளர்.

## கஜான் ஸ்ரோர்ஸ்



கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்

## ASEER VANIGA NILAIYAM

Paper, Stationery, Exercise, Books & Wedding Cards



202A, K.K.S. Road, Jaffna.
Sri Lanka.


Tel : 021 222 2842 Fax : 021 222 2842
Mobile : 0777721740 Rec: 021 4590151


மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
ராஜ்
பான்சி
போட்டோ பிரதி
மற்றும்
யாழ் – கொழும்பு பஸ் சேவை
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.


மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
டினு
பல்பொருள் வாணிபம்
DINU
MULTY SPOT
கட்டுவன் வீதி,
ஏழாலை.
T.P : 021 3214500
0777582824


மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
தரம் 6 முதல்
O/L ற்கு
யாழ் நகரின் நம்பர் – 1 கல்வி நிலையம்
எடிசன்
அக்கடமி
கிளைகள் :
யாழ்ப்பாணம்,
நல்லூர்,
வட்டுக்கோட்டை,
கலட்டி,
கொக்குவில்,
சண்டிலிப்பாய்.


மனிதம் இதழிற்கு எமது நல்வாழ்த்துக்கள்
பரணிகா
மல்ரி சென்ரர்
Paranika
Multi Center
K.K.S. Road,
Mallakam.


Paarathy Food Products
Since 1990
VALAMPUREE
Mixture
50g
வலம்புரி
மிக்சர்
Rs20/=
100%
Vegetarian
Manufactured & Distributed By: "PAARATHY INDUSTRIES",19,Chamipan lane ,Kokuvil,Jaffna.



மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
லாவண்யா
பல், மூக்குக் கண்ணாடி அகம்
552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
Tel: 222 9053, 2225569
கிளை ஸ்தாபனம்:
பருத்தித்துறை வீதி,
(பொலிஸ் நிலையம் முன்பாக)
நெல்லியடி.
நியூ மெடிக் கெயார்
வைத்தியசாலை
இல. 32, கச்சாய் வீதி,
சாவகச்சேரி. தொ.பே : 021 373 4505





மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
தேனு
களஞ்சியம்
இல. 29, நவீன சந்தை,
திருநெல்வேலி.
Tel: 021 222 6013




மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
SDS
Computer Services
FOR ALL YOUR INFORMATION
TECHNOLOGY SOLUTIONS
OUR SERVICES
Sales, Repair & Maintenance,
Software Development ,
all Type of Security Systems & etc....
Show Room :
No:42/1, College Road, Jaffna.
Tel : 021 5100105, Fax : 021 2224500
Hot line : 077 7874705
E.mail : sds-jaffna@yahoo.com.
Head Office :
No:43, Off fussels Lane,
Colombo - 06.
Tel : 0113158496, Fax : 0112 360673




மனிதம் இதழிற்கு
எமது நல்வாழ்த்துக்கள்
ஸ்ரீ வராகி
ரெக்ஸ்ரைல்ஸ்
அழகு சாதனப் பொருட்கள்,
மேக்கப் சாதனங்கள்,
ஐசிங் கேக், பெண்களுக்கான
சகலவிதமான தையல்கள்,
திருமண வைபவங்களுக்கான
ஓடர் பொருட்கள் என்பவற்றைப்
பெற்றுக் கொள்ளலாம்.
கொக்குவில் மேற்கு.
கொக்குவில், யாழ்ப்பாணம்.
T.P : 0778085766,
0752946699
S.A.Tharmeekan
S.S.Sivarathan



அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன்
சேவைக்கழக உறுப்பினர்கள்



கராத்தே போட்டியில் வெற்றியீட்டியவர்கள்

# 20வது ஆண்டு நிறைவையொட்டி கழக அங்கத்தவர்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட போட்டிகள்

### கட்டுரைப் போட்டி

| | |
|---|---|
| கனிஷ்ட பிரிவு | 1) ச.யாரழசன் |
| | 2) சி.சிவகரன் |
| | 3) சி.சரணியசர்மா |
| சிரேஸ்ட பிரிவு | 1) கு.கபிலன் |
| | 2) ச.கஜந்தன் |
| | 3) பி.ஜோசப் சஜீவன் |

### கவிதைப் போட்டி

| | |
|---|---|
| கனிஷ்ட பிரிவு | 1) சி.சிவகரன் |
| | 2) நே.சரவணன் |
| | 3) தி.சுகிர்தன் |
| சிரேஸ்ட பிரிவு | 1) கு.கபிலன் |
| | 2) பி.ஜோசப்சஜீவன் |
| | 3) ச.கஜந்தன் |

### தமிழ் பேச்சுப் போட்டி

| | |
|---|---|
| கனிஷ்ட பிரிவு | 1) கி.சேயோன் |
| | 2) இ.சாரங்கன் |
| | 3) வ.சிவகரன் |
| சிரேஸ்ட பிரிவு | 1) கு.கபிலன் |
| | 2) சி.நிறோசன் |
| | 3) க.தாருசன் |

### ஆங்கிலப் பேச்சுப் போட்டி

| | |
|---|---|
| கனிஷ்ட பிரிவு | 1) கி.சேயோன் |
| | 2) இ.சாரங்கன் |
| | 3) நே.சரவணன் |

### பொது அறிவுப் போட்டி

| | |
|---|---|
| கனிஷ்ட பிரிவு | 1) வ.சிவகரன் |
| | 2) சோ.கஜன் |
| | 3) சி.சிவனீலன் |
| சிரேஸ்ட பிரிவு | 1) ச.கஜந்தன் |
| | 2) கு.கபிலன் |
| | 3) பி.ஜோசப்சஜீவன் |

## கழக அங்கத்தவர்கள் [Club Members]

01) U.Mirojan
02) M.Nanthanan
03) R.Birunthan
04) G.Kayanan
05) S.Thuvarahan
06) S.Thiriyambaga sarma
07) S.Tharsan
08) P.Luxman
09) T.Sivajeevan
10) V.Mahasenan
11) S.Pabikaran
12) Aingkaran
13) Vikkinesvaran
14) Thiviyan
15) P.Hariraj
16) S.Hariviknes
17) Ragnsithan
18) Thanujan
19) A.Kirusihan
20) S.Hajanthan
21) K.Kapilan
22) S.Sivakaran
23) S.Kajan
24) K.Seyan
25) V.Sivaharan
26) S.Sivaneepan
27) R.Rayoothan
28) K.Tharusan
29) N.Saravanan
30) S.Ratheesan
31) P.Yasapsajivan
32) E.Saranhan
33) S.Nirasan
34) S.Yalarasan
35) S.Yanupan
36) S.Nisanan
37) Akilesan
38) B.Sayanthan

## 2012இல் இணைந்து கொண்டவர்களில் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள்

01) T.Sahirthan
02) S.Sanathanan
03) E.Kanappiriyan
04) S. Kirusiran
05) K.Kagnseelan
06) A.Kowthaman
07) S.Kajaram
08) V.Thuvarahan
09) V.Anojan
10) S.Yathursanan
11) M.Dilaksan
12) S.Piremalaksan
13) S.Saraniyasarma
14) S.Thanusan


# நன்றிகள் ஆயிரம் உங்களுக்கு.....

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சேவைக்கழகத்தின் மனிதம் சஞ்சிகை இதழ் 7 ஆனது சிறப்பாக மலர்வடைந்துள்ளது. இதற்கு பெருவழி காட்டியாகவும் நல்ல ஆலோசகராகவும் இருந்து எம்மை வழிநடத்திய கல்லூரியின் முதல்வர் திரு.வீ.கணேசராஜா அவர்களுக்கும் எமது சஞ்சிகை ஆக்கத்திற்கு பெரும் பக்கபலமாக நின்றுழைத்த கல்லூரியின் பிரதி அதிபரான திரு.பொ.ஞானதேசிகள் அவர்களுக்கும், திரு.ச.நிமலன் அவர்களுக்கும் உப அதிபர் திருமதி.ச.சுரேந்திரன் அவர்களுக்கும் எமது முதற்கண் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் கழகத்தின் ஒளிச்சுடராய் நமக்கெல்லாம் வெற்றிப்பாதையை சுட்டிக்காட்டி எம்மைக் கட்டுக்கோப்புடன் வழிநடத்தி வரும் கழகப் பொறுப்பாசிரியர் திரு.வ.தவகுலசிங்கம் அவர்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மலரிற்கு உருவம் வழங்கிய தயா அச்சகத்தினருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம். மேலும் சிறப்பு பிரதிகளை பெற்று எமது ஆண்டு விழாவினை அலங்கரித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது நன்றிகள்

எல்லாவற்றிற்கும் மேலாக மனிதம் சஞ்சிகைக்கான ஆக்கங்களைத் தந்தும் பிற வழிகளிலும் சஞ்சிகை வெளியீட்டிற்கு பங்காற்றிய சேவைக்கழகத்தின் அங்கத்தவர்களுக்கும் கல்லூரியை விட்டுப் பிரிந்து சென்றாலும் கழகத்துடன் தொடர்ந்தும் உறவுகளைப் பேணியும் ஒத்தாசை வழங்கியும் வரும் முன்னாள் கழக உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் எமது நலன் விரும்பிகளுக்கும் இந்தத்தருணத்தில் எமது மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



**நிர்வாக சபை 2011/ 2012**
**சேவைக்கழகம்**




**இறுதி சீட்டிழுப்பில் பெறுமதியான**
**மோட்டார் வாகனங்கள் 03**
Mitsubishi Lancer | Toyato Yaris | Nissan Sunny

ரூபா. 100,000/- பெறுமதியான சிங்கர் அல்லது தம்ரோ வீட்டுப்பாவனைப் பொருட்கள் 75
ரூபா. 15,000/- பெறுமதியான காகீல்ஸ் பரிசு வவுச்சர்கள் 1500
ரூபா. 100,000/- பெறுமதியான தம்பதிவ சுற்றுலா 25 (சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்கிற்கு)
ரூபா. 10,000/- பெறுமதியான சேமிப்பு வைப்புக்கள் 2000

**அனைத்து காலாண்டு சீட்டிழுப்பிலும்**
Singar | DAMRO | Cargills

ரூபா. 100,000/- பெறுமதியான சிங்கர் அல்லது தம்ரோ வீட்டுப்பாவனைப் பொருட்கள் 50
ரூபா. 15,000/- பெறுமதியான காகீல்ஸ் பரிசு வவுச்சர்கள் 1000
ரூபா. 100,000/- பெறுமதியான தம்பதிவ சுற்றுலா 25 (சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்கிற்கு)
ரூபா. 10,000/- பெறுமதியான சேமிப்பு வைப்புக்கள் 1000

இலங்கை வங்கியின் சேமிப்பு கணக்கில் தொடர்ச்சியாக
3 மாத காலப்பகுதிக்கு ரூபா 10,000/- அல்லது அதற்கு மேலதிகமாக
மீதி பேணப்படுவதன் மூலம் போட்டியில் நுழையும் சந்தர்ப்பம்

கூடுதலான ரூபா 10,000/-
பெருக்கங்களுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம்.
(நிபந்தனைக்குட்பட்டது)

BOC

தயா அச்சகம், யாழ்ப்பாணம்.